
நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
அம்பிகா ஜுவலர்ஸ்
77 செட்டியார் தெரு கொழும்பு-11.
டெலிபோன் 422839 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது
# தினபதி
ரூ 3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6555 1990 ஏப்ரல் 3 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238


# யாழ். திருமலைக்கு ஆயிரம் நேரடி தொலைபேசி வசதிகள்

## உலக வங்கி நிதி உதவியுடன அவசர நடவடிக்கை

— கே. அரசரத்தினம் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

**இந்த வருட முடிவுக்குள் யாழ்ப்பாணம் திருகோணமலை ஆகிய இரு பகுதிகளுக்கும் 1000 நேரடித் தொலைபேசி இணைப்புகளை ஏற்படுத்துவதற்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

தொலைத் தொடர்பு திணைக்கள அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது—

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான 500 இணைப்புகளில் 72 மைக்ரவேவ் அலைவரிசை மூலம வழங்கப்படும்.

திருமலைக்கான 500 இணைப்புகளில் 72 புல்மோட்டை, நிலாவெளி, தமபலகாமம ஆகிய பகுதிகளுக்கு திருமலை பரிவர்த்தனை



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் யாழ் நகரில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார் அல்லவா? அப்போது பிடிக்கப்பட்ட படம்— படத்தில் இடமிருந்து வலமாக திரு யோகி, திரு மாத்தயா, திரு பிரபாகரன், திரு அன்டன் பாலசிங்கம, திருமதி அடேல் பாலசிங்கம ஆகியோர் காணப்படுகின்றனர்— (ண)



பத்திரிகையாளர்களுடன் திரு பிரபாகரன்— (ண)

## ஆயுத அழிப்பு

தீவிரவாதிகளிடம இருந்து பாதுகாப்புப் படையினர் கைப்பற்றிய 2000 ஆயுதங்கள் எதிர்வரும ஏழாம திகதி அழிக்கப்படும.

(2ஆம பக்கம பார்க்க)

## பாடசாலை அனுமதியில் தலையீடு வேண்டாம் —லலித்

கொழும்பு, ஏப் 2

பாடசாலை அனுமதிகளை எவ்விதத் தலையீடுகளும இன்றி வழங்குமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி நேற்று கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்—

பாடசாலை அனுமதிகளை

(8ஆம பக்கம பார்க்க)

## யாஸிர் அரபாத் இலங்கைவருவார்.

கொழுமபு, ஏப் 2

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத், ரமழானுக்குப் பிறகு, அதாவது இவ்வருடம மே மாதம அளவில் இலங்கைக்கு விஜயம செய்யவிருக்கிறார்.

சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகமமது விடுத்த அழைப்பைத் தொடர்ந்து இலங்கைக்கு வருகைதர அவர் இணக்கம தெரிவித்திருக்கிறார்.

இந்திய அரசின் அழைப்பின் பேரில் சபாநாயகர் அண்மையில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம ஒன்றை மேற்கொண்டிருந்தார். பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தும இந்திய அரசின்

(2ஆம பக்கம பார்க்க)

## 6 ஆவது திருத்தம் மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி பிரபாகரன் கருத்து

யாழ்ப்பாணம, ஏப் 1

ஆறாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை [நாட்டுப் பிரிவினைக்கு எதிரானது] அரசாங்கத்தினால் நீக்க முடியாது போனால் தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்கு கொண்டு போட்டியிட முடியாத நிலை ஏற்படும— இப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் கருத்துத் தெரிவித்தார்—

தமிழர் தாயகத்தை [வடக்கு கிழக்கு] ஒன்றுபட்ட பூமியாகவே நாம பார்க்கிறோம— இரண்டு துண்டுகளாகப் பார்க்கவில்லை— ஆகவே ஒன்றுபட்ட பிரதேசத்துக்கு இணைப்போ அல்லது இணைப்புக்கு சர்வஜன வாக்

(2ஆம பக்கம பார்க்க)

அவர் மேலும் கூறியதாவது—
யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான 500 இணைப்புகளில் 72 முல்லைத்தீவு, கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய பகுதிகளுக்கும் அநுராதபுரம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக ... வெளி, தம்பலகாமம் ஆகிய பகுதிகளுக்கு திருமலை பரிவர்த்தனை நிலையத்தினூடாக வழங்கப்படும்—
70 லட்சம் அமெரிக்க டாலர்

(2ஆம் பக்கம் பார்க்க)

பத்திரிகையாளர்களுடன் திரு பிரபாகரன்— (ண)



மெய்ப் பாதுகாவலர்கள் புடைசூழ திரு பிரபாகரன் காணப்படுகிறார்— (ண)

## உண்மையான பிரபாகரனா ?

திரு பிரபாகரன் பத்திரிகையாளர்கள் சிலரின் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்த போது ஒரு கூட்டத்தில் டாக்டர் அன்டன்

(2ஆம் பக்கம் பார்க்க)

வேலுப்பிள்ளை பிரபாகரன் கருத்துத் தெரிவித்தார்— ... லது இணைப்புக்கு சர்வஜன வாக்

(2ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையில் இருந்து திருப்ப

# இந்தியப் படை பற்றி நான் அவதூறு பேசவில்லை

— கருணாநிதி

சென்னை ஏப் 2

இந்தியப் பாதுகாப்புப் படையினர் பற்றி நான் ஒரு போதுமே அவதூறாகப் பேசியதில்லை—

இப்படி தமிழ்நாடு முதலமைச்சர் மு கருணாநிதி நேற்று மீண்டும் வலியுறுத்தினார்—

இலங்கையில் உள்ள இந்தியப் படையினர் தாயகம் திரும்பியது தொடர்பாக முதல்வர் மு கருணாநிதி தமிழ்நாடு சட்டப் பேரவையில் கருத்து வெளியிட்டிருந்தார் அல்லவா?

முதல்வர் கருணாநிதியின் இந்தக் கருத்துக்கள் பற்றி தமிழ்நாடு சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் திரு எஸ்

(2ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி கம்பி திருட்டு

யாழ்ப்பாணம், ஏப் 1

யாழ், தொலை தொடர்பு நிலையத்திற்கும் வீரசிங்கம் மண்டபத்திற்கும் இடையிலான தொலை பேசிக் கம்பிகள் திருடர்களால் வெட்டப்பட்டுள்ளன.

இதனால் உள்ளூர் தொலை பேசி சேவைகள் அனைத்தும் சீர்குலைந்துள்ளன.

(ண-மு-120)

**சோமண்ணை**



அவை வீதிகளில் மட்டுமென்ன நடைபாதைகளிலும் செல்லும் பாருங்கோ—

### 5 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை

# தனியார் பஸ்கள் விரும்பிய வீதிகளில் செல்ல அனுமதி

கொழும்பு, ஏப் 2

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் தனியார் பஸ்கள் எந்த வீதிகளிலும் ஓடலாம்—

ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இந்த விசேஷ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது—

தனியார் பஸ் போக்குவரத்து திணைக்களப் பணிப்பாளர் திரு எஸ் ஏ எம மெண்டிஸ் இதனைத் தெரிவித்தார்—

பண்டிகைக் காலத்தின் போது ஏற்படும் போக்குவரத்துச் சிரமங்களைத் தவிர்க்கும் முகமாகவே தனியார் பஸ் சொந்தக்காரர்களுக்கு இந்த விசேஷ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது—

போக்குவரத்து அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸின் பணிப்புரையின் பேரிலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது—

விசேஷ இரவுச் சேவைகளை நடத்துமாறும் தனியார் பஸ் உரிமையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனா—

இந்த இரவு சேவை தனியார் பஸ்கள் கொழும்பில் இருந்து யாழ்தேவை, காலி, கதிர்காமம்,

(2ஆம் பக்கம் பார்க்க)

# பதவி இழந்த அமைச்சர்கள் எம். பி.களாக தொடரலாம்

கொழும்பு, ஏப் 2

கடந்த வார அமைச்சரவை மாற்றத்தின் போது பதவி இழந்த அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்கள் ஆகியோர் அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்யுமபடி கேட்கப்பட மாட்டார்கள்— ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி விடுமாறும் அவர்கள் கேட்கப்பட மாட்டார்கள்—

அதிகாரபூர்வ வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன—

பதவியிழந்த இவர்கள் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து வருவார்கள்—

[ண—032]

# கடத்தப்பட்ட சிறுமியை விடுதலைப் புலிகள் மீட்டனர்

அக்கரைப்பற்று, ஏப் 1

பாட்டனுடன் படுத்துறங்கிய போது கடத்திச் செல்லப்பட்ட ஜுனைதா என்ற சிறுமி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலையீட்டினால் மீட்கப்பட்டார்—

இவர் தனது பாட்டனாருடன் படுத்துறங்கிய வேளை இவளை வாலிபன் ஒருவன் கடந்த 27ஆம் திகதி கடத்திச் சென்றான் என்பது தெரிந்ததே—

சிறுமியை தேடிக் கண்டுபிடிப்பதற்காக இச்சிறுமியின் தந்தை எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை—

சிறுமியை கடத்தினார் என்று கூறப்படும் பிரஸ்தாப வாலிபன் மற்றுமொரு சிறுமியை கடத்திச் செல்ல முற்பட்ட போது கிராமவாசிகள் அவனை மடக்கிப்

(2ஆம் பக்கம் பார்க்க)

### 5 ஆம் திகதி முதல்

# யாழ். இரவு ரயிலில் மேலதிக உறங்கல் இருக்கைகள்

யாழ்ப்பாணம், ஏப் 1

யாழ்ப்பாணம், காங்கேசன் துறைக்கான இரவுதபால் ரயிலில் மேலதிகமாக 56 மூன்றாம வகுப்பு உறங்கல் இருக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹ்ர் முடிவு | — 4-34 |
| ஸுபஹ் | — 4-49 |
| சூரிய உதயம் | — 6-09 |
| ளுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-22 |
| மஃரிபு | — 6-21 |
| இஷா | — 7-41 |

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# வடக்கு கிழக்கில் கல்விப் பணிப்பாளர்கள் தரம் உயர்த்தப்படுவர்

கொழும்பு, ஏப். 2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதி கல்விப் பணிப்பாளர்கள் அனைவரும் மாவட்ட கல்விப் பணிப்பாளர்களாக தரம் உயர்த்தப்படுவர்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு இரா பற்குணராஜா இத்தகவலை தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண சபை - அமைக்கப்பட்ட பின்னர் பிரதி கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களே மாவட்ட கல்விப் பணிப்பாளர்களின் கடமைகளையும் செய்து வந்தனர்.

இதனாலேயே இவர்கள் மாவட்ட கல்விப் பணிப்பாளர்களாக தரம் உயர்த்தப்படுவர் என்று திரு பற்குணராஜா மேலும் தெரிவித்தார். (ல-வ-து)

## இந்தியப்படை...


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆர் ராதா இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் திரு குமரி அனந்தன் இக்கட்சியின் கொறடா திரு பாலசுப்பிரமணியம் ஆகியோர் நேற்று சட்டசபையில் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே முதலமைச்சர் கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்செய்தியை அகில இந்திய வானொலி நேற்று ஒலிபரப்பியது.

[ண—வ]



## கைப்பணிப் பொருள் கண்காட்சி

லக்சல நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு நேற்றுக் காலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அங்கு இடம்பெற்ற கைப்பணிப் பொருள் கண்காட்சியில் நேபாள நாட்டு கைப்பணி பொருள் ஒன்றை ஜனாதிபதி பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் உல்லாச பயணத் துறை அமைச்சர் திரு எஸ் தொண்டமான், கிராம கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு என் ஜீ பி நெல்சன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(ல—வ)

## இன்றைய திரைகளில்

10 வது வாரம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
கடைசி வாரம்
2-30, 6-00, 9-30
விடோ
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00
பிரபு - அமலா

## பாடசாலை...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் போது நடுநிலைமையுடன் செயற்பட வேண்டியது அதிபர்களின் கடமையாகும் என்றார்.

இதற்குப் புறம்பாக எவ்வித தலையீடுகளுக்கும் அவர்கள்

## தனியார்...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா, குருநாகல் ஆகிய இடங்களுக்கு நடத்தப்படும்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கூடுதலான கட்டணத்தை அற

## யாஸிர் அரபாத்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அழைப்பை ஏற்று அங்கு வந்திருந்தார்.

கடந்த மார்ச் 27 ஆம திகதி சபாநாயகர் ,தலைவர் அர

டுக் கொண்டார், இலங்கைக்கு முழு அரபு உலகமும் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் உறுதி கூறினார்,

## நாடாளுமன்ற உறுப்பினர்கள்

## அபி. பணிகளுக்கான நிதி உதவிகள் யாவும் இவ்வாண்டு வழங்க முடிவு

கொழும்பு, ஏப். 2

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது தொகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 25 லட்சம் ரூபா நிதித் தொகையும் கடந்த வருட நிலுவைத் தொகையும் இந்த ஆண்டில் வழங்கப்படும்.

அரசாங்கம் இதற்கான முடிவை எடுத்திருக்கிறது.

வருடா வருடம் ஒவ்வொரு தொகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அத்தொகுதி எம்பிக்கு இந்த நிதி வழங்கப்படுவது வழக்கம்.

ஆனால் கடந்த வருடம் நாட்டில் நெருக்கடி நிலை தோன்றியிருந்தமையால் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டன. இதனால் ஒதுக்கப்பட்ட நிதி அந்தந்த தொகுதி எம்பிமாருக்கு வழங்கப்படவில்லை.

தற்சமயம் நாடு முழுவதிலும் அமைதியான சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் இந்த ஆண்டு மேற்படி நிதியை திறைசேரியிலிருந்து வழங்க என்று நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் திரு ஆர் பாஸ்கரலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்த திரு பாஸ்கரலிங்கம் சகல அரசாங்க அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்திருக்கிறார். (ஐ—வ)

## அபிவிருத்தி பற்றிய கூட்டம்

கொழும்பு, ஏப். 2

அட்டாளச்சேனை பொது சன நூலக அபிவிருத்தி தொடர்பான கூட்டம் எதிர்வரும் 7ஆம திகதி காலை நூலக மண்டபத்தில் நடைபெறும்.

சனசமூக அபிவிருத்தி அலுவலரும் விசேட ஆணையாளருமான ஜனாப் எஸ் எம இத்ரீஸ் இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் விடுத்திருக்கிறார்.

(ல—007)

## அடிக்கல்

கொழும்பு, ஏப் 2

கொழும்பு, நவகம்புர ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவிலில் அமைக்கப்படவுள்ள புதிய மண்டபத்துக்கு வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு பீ சிறிசேன குரே கடந்த சனிக்கிழமை காலை அடிக்கல் நாட்டினார்

(ல—நு—007)

## 6 ஆவது திருத்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கெடுப்போ என்ற கேள்விகளுக்கு எல்லாம இடமில்லை என்றும திரு பிரபாகரன் சொன்னார்.

நேற்று முன்தினம யாழ் நல்லூரில் தாம நடத்திய பத்திரிகையாளர்கள் மாநாட்டில் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே திரு பிரபாகரன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவரிடம கேட்கப்பட்ட மற்றும சில கேள்விகளும அவற்றிற்கு அவர் அளித்த பதில்களும வருமாறு—

கேள்வி: உங்கள் குறிக்கோள் என்ன என்பதை மக்கள் இப்போது அறிய விரும்புகிறார்கள்.

பதில்: எமது குறிக்கோள் மக்கள் எல்லோருக்கும நன்கு தெரியும. கடந்த 17 வருடங்களாக நாம எதற்குப் போராடுகிறோம என்பதும மக்களுக்குத் தெரியும.

கேள்வி: தமிழீழம என்பதா?

பதில்: ஆம. அது எல்லோருக்கும தெரியும. எம்முடன் பேச்சு நடத்துபவர்களுக்கும தெரியும. அதில் ஒளிக்க ஒன்றுமில்லை.

கேள்வி: "தமிழீழத்திற்கு மாற்றுத் திட்டம ஒன்று முன் வைக்கப்பட்டால் தமிழீழக் கோரிக்கையை நாம கைவிடத் தயார்" என்று நீங்கள் ஒரு முறை குறிப்பிட்டிருந்தீர்கள். எப்படியான மாற்றுத் திட்டத்தை எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: நாம எந்தச் சந்தர்ப்பத்திலும அப்படிக் கூறவில்லை. தமிழீழத்துக்கு ஈடான மாற்றுத் திட்டம முன் வைக்கப்பட்டால் அதைப் பரிசீலனை செய்வோம் என்றுதான் கூறி வந்திருக்கிறோம.

கேள்வி: இப்போதும அதுதான் உங்கள் நிலையா?

பதில்: தமிழீழத்துக்கு மாற்றுத் திட்டம ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டும என்ற நிலை இப்போது வரவில்லை. வந்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம.

என்பது என் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது.

கேள்வி— இந்திய அரசுடன் உங்களுடைய உறவு எப்படி?

பதில்— இப்போது ஆட்சியில் இருப்பவர்களுக்கு நாம எதிரானவர்கள் அல்லர். அவர்கள் எங்கள் அரசியல், இராணுவ விவகாரங்களில் தலையிடக் கூடாது.

கேள்வி— இலங்கையில் இருந்த முன்னாள் இந்தியத் தூதுவர் டிக்ஷிட், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்— இருவரும தமது இந்திய நலன்களை மட்டும பார்த்தார்கள். அவர்கள் எங்களோடு பேசிய போதெல்லாம அதிகாரம தொனிக்கும வகையிலேயே பேசினார்கள்.

கேள்வி— ஈரோஸ் அமைப்புடன் உங்கள் உறவு எப்படி?

பதில்— சிறிது காலமாக எங்களுக்குள் உறவு நன்றாக இல்லை. கடந்த காலச் சம்பவங்களில் அவர்கள் உறுதியான நிலைப்பாடு எதனையும எடுக்கவில்லை. எல்லோரையும திருப்திப்படுத்தும நிலையில் இருந்தார்கள். அதனால் அவர்கள் பற்றி எமக்கு சில சந்தேகங்கள் இருக்கின்றன. அவர்களிடம கேட்டுத் தெரிந்து கொண்டுதான் உறவைச் சீர்படுத்துவது பற்றி முடிவு செய்ய வேண்டும.

[உ]

## ஆயுத அழிப்பு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இராணுவ தலைமையகத்தில் நடைபெறவிருக்கும இந்த ஆயுத அழிப்பு வைபவத்தில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன கலந்து கொள்வார்.

(ண—032)

## உண்மையான...

பாலசிங்கம் குறுக்கிட்டு — எல்லாப் பத்திரிகையாளர்க

கெப்பிட்டல்
(கொழும்பு)
கடைசி வாரம்
2-30, 6-00, 9-30

லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00

பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

**பூ...**
**பூவா**
**பூத்திருக்கு**
(கலர்)

---

17 வது வாரம்

ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30 6-00

மிட்லண்ட்
(நாவலப்பிட்டிய)
10-30, 2-00, 6-00, 9-00

சாந்தி
(மட்டுநகர்)
2-30, 6-30

ரஜனிகாந்த்
(இரட்டை வேடம்)
ராதா - நதியா
நடித்த

**ராஜாதி ராஜா**
(கலர்)

---

18 வது வாரம்

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00

கிங்ஸ்
(பதுளை)
10-30, 2-30, 6-00

நியூ ரொயல்
(இரத்தினபுரி)
10-30, 2-30, 6-00, 9-00

கார்த்திக் - குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த

**வருஷம் 16**
(கலர்)

---

## பாடசாலை...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் போது நடுநிலைமையுடன் செயற்பட வேண்டியது அதிபர்களின் கடமையாகும என்றார் —

இதற்குப் புறம்பாக எவ்வித தலையீடுகளுக்கும அவர்கள் இடமளிக்கக் கூடாது என்றும அமைச்சர் கேட்டுக் கொண்டார்-

கல்விச் சேவைகள் திட்ட அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்க கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ஆர் எம புலேந்திரன் கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம டி டி பீரிஸ் தேசியக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம திரிலோகசுந்தரி காரியவசம ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம ஒன்றில் உரையாற்றும போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்- [ண—ர]

---

## கடத்தப்பட்ட...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பிடித்தனர்-

ஆயினும அந்த வாலிபன் தான் சிறுமியை கடத்திச் சென்றதை ஒப்புக் கொள்ளவில்லை- இறுதியில் கிராமவாசிகள் அந்த வாலிபனை தமிழீழ விடுதலைப் புலிகளிடம ஒப்படைத்தனர்-

தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த வாலிபனை விசாரணைக்கு உட்படுத்தினர்- விசாரணைகளின் போது அந்த வாலிபன் தான் அச்சிறுமியை பாண்டிருப்பில் உள்ள ஒரு வீட்டில மறைத்து வைத்திருப்பதாகக் கூறினான்-

தமிழீழ விடுதலைப் புலிகள் வாகனம ஒன்றில் சிறுமியின் தந்தையுடன் பாண்டிருப்புக்கு சென்றனர்- கடத்தப்பட்ட சிறுமியையும மீட்டனர்-

சந்தேகத்துக்குரிய பிரஸ்தாப வாலிபனை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முகாமில் தடுத்து வைத்திருக்கிறார்கள்-

ஷரீப்தீன் (வயது 29) என்ற இந்த வாலிபன் பல சைக்கிள் திருட்டுச சமபவங்களுடனும தொடர்புடையவர் என்று கூறப்படுகிறது- ண—வு—035]

---

## தனியார்...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா, குருநாகல் ஆகிய இடங்களுக்கு நடத்தப்படும-

தனியார் பஸ் உரிமையாளர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கூடுதலான கட்டணத்தை அறவிட்டால் அது குறித்து உடனடியாக தனியார் பஸ் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்-

[ண—ர]

---

## யாழ் திருமலை...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

செலவில் இவற்றிற்கான அவசர வேலைகள் மேற்கொள்ளப் படும- அடுத்த கட்டமாக உலக நாடுகள் பலவற்றின் உதவித் தொகையுடன் வடக்கு கிழக்கு முழுவதற்கும பொதுவான தொலைத் தொடர்பு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் படும-

புல்மோட்டையில் புதிதாக தொலைபேசி பரிவர்த்தனை நிலையம ஒன்று அமைக்கப்படும- துணுக்காயில் உள்ள பரிவர்த்தனை நிலையம முற்றாக புனரமைக்கப் படும-

துணுக்காய் பரிவர்த்தனை நிலையத்தில் இருந்த கூரையை இந்தியப் படையினர் கழற்றி வேறு தேவைகளுக்குப் பயன் படுத்தியுள்ளனர்-

அநுராதபுரம, மடுகந்த, கிளிநொச்சி, யாழ்ப்பாணம, துணுக்காய் ஆகிய இடங்களில் தொலைபேசி கோபுரங்கள் அமைக்கப் படும-

இத்திட்டம பூர்த்தி செய்யப் பட்டதும 49 ஆயிரம இணைப்புகளை வழங்கக் கூடியதாக இருக்கும-

இந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்னோடியாக ஆலோசகர்கள் குழு ஒன்று எதிர்வரும 26 ஆம திகதி கொழும்பு வருகிறது-

இப்படி அந்த அதிகாரி கூறினார்-

[உ—மு—120]

---

# யாஸிர் அரபாத்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அழைப்பை ஏற்று அங்கு வந்திருந்தார்.

கடந்த மார்ச் 27 ஆம திகதி சபாநாயகர் ,தலைவர் அரபாத்தை சந்தித்து, இலங்கை ஜனாதிபதி, இஸ்ரவேலிய நலன் காக்கும பிரிவை மூடிவிட எடுத்திருக்கும தீர்மானம பற்றி தெரிவித்தார்.

இந்த நலன் காக்கும பிரிவு 20ஆம திகதி மூடப்படவிருப்பது குறித்து தலைவர் அரபாத் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.

ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்தை தாம பெரிதும வரவேற்பதாக அவரிடம அறிவிக்குமபடி தலைவர் அரபாத், சபாநாயகரிடம கேட்டுக் கொண்டார், இலங்கைக்கு முழு அரபு உலகமும ஒத்துழைப்பு வழங்கும என்றும அவர் உறுதி கூறினார்,

இஸ்ரவேலிய நலன் காக்கும பிரிவை மூடுவது என்ற தீர்மானத்தை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தைச் சந்தித்து, முதலில் தெரிவிக்கும கௌரவத்தை சபாநாயகர் பெற்றுக் கொண்டார்.

புதுடில்லியில் சபாநாயகர் அரபு நாடுகளின் எல்லா தூதுவர்களையும சந்தித்து பலஸ்தீன பிரச்சினையில் இலங்கை கொண்டிருக்கும நிலைப்பாட்டை எடுத்து விளக்கினார். அத்தோடு இஸ்ரவேல் நலன் காக்கும பிரிவை மூடுவது என்ற தீர்மானத்தையும தெரிவித்தார்.

மிகத் தைரியமாக எடுத்துக் கொண்ட இந்த நடவடிக்கைக்கு அரபு நாடுகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கும இலங்கை மக்களுக்கும நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

(ண—ங)

---

## யாழ். இரவு...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

கைகள் அதிகரிக்கப்படும- எதிர்வரும 5 ஆம திகதி முதலே இந்த உறங்கல் இருக்கைகள் அதிகரிக்கப்படவிருக்கின்றன-

நாளை 4 ஆம திகதி முதல் 2 ஆம வகுப்பு படுக்கை அறை வசதிகள் நிறுத்தப்படுகின்றன-

இதனை அடுத்தே இந்த மேலதிக 3 ஆம வகுப்பு உறங்கல் இருக்கைகள் அதிகரிக்கப்படுகின்றன-

கொழும்பு கோட்டை ரயில் நிலைய அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்-

தினமும காலை 3 ஆம வகுப்புக்கான ஒரு உறங்கல் அறை ரயில் பெட்டியும இரண்டு இரண்டாம வகுப்பு உறங்கல் இருக்கை பெட்டியும சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன-

5 ஆம திகதி முதல் 2 ஆம் நாம வகுப்பு உறங்கல் இருக்கை பெட்டிகளும 2 இரண்டாம வகுப்பு உறங்கல் இருக்கைப் பெட்டிகளும பொருத்தப்படுமே என அவர் மேலும தெரிவித்தார்-

[ண—120]

---

## கிராம சேவகர் சடலம் கண்டெடுப்பு

கொழும்பு, ஏப் 2

துப்பாக்கிச் சூட்டால் மரணமான ஒரு கிராம சேவகரின் சடலம காட்டுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டது-

அரங்கல பொலீஸ் பகுதிக்குச் சொந்தமான ஹபரவ காட்டில் இருந்தே இச்சடலம பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டது-

மரணமானவர் ஒவிலிகந்தையைச் சேர்ந்த கிராம சேவா அதிகாரியான பீ டீ சோமரத்ன என்று அடையாளம காணப்பட்டு உள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்- (ல-007).

---

செய்வோம் என்றுதான் கூறி வந்திருக்கிறோம.

கேள்வி: இப்போதும அதுதான் உங்கள் நிலையா?

பதில்: தமிழீழத்துக்கு மாற்றுத் திட்டம ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டும என்ற நிலை இப்போது வரவில்லை. வந்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம.

கேள்வி: அப்படியானால் இப் போதுள்ள நிலை?

பதில்: மாகாண சபையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு உருப்படியான அதிகாரங்கள் இல்லை. இதை நாம தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. என்றாலும நாம மாகாண சபையில் பங்கேற்க முடிவு செய்திருக்கிறோம. மாகாண சபையின் அதிகாரங்கள் பற்றிப் பேசி முடிவெடுப்போம.

கேள்வி: அப்படியானால் ஐக்கிய இலங்கைக்குள் மாகாண சபைக்கு அதிக அதிகாரங்கள் வழங்குமபடி கேட்கிறீர்கள்?

பதில்: ஐக்கிய இலங்கை பற்றிய பிரச்சினை இப்போது வரவில்லை. மாகாண சபைத் தேர்தலின் பின் மக்களின் பிரச்சினைகள் பற்றித் தொடர்ந்து பேசுவோம. தற்போதைய பேச்சுகளில் எந்த முடிவும இன்னும வரவில்லை.

கேள்வி: சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்-

பதில்- முன்னர் மேற்கொண்ட குடியேற்றங்களை அரசு நிறுத்தியிருக்கிறது- பழைய குடியேற்றங்கள் குறித்து நாம சரியான ஒரு முடிவு எடுக்க வேண்டும-

கேள்வி- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியில் உங்கள் பங்கும பணியும என்ன?

பதில்- கட்சித் தலைவரின் (அருகில் இருந்த மாத்தயாவைச் சுட்டிக் காட்டி) முடிவுகளை அனுசரித்தும அங்கீகரித்தும இருக்கும-

கேள்வி தேர்தலின் பின் மாகாண சபை முதல்வர் பதவியை ஏற்குமபடி அவர்கள் உங்களைக் கேட்டால்...?

பதில்- (சிரித்துக் கொண்டே) பதவியை ஏற்பதா விடுவதா

---

சர் திரு ரஞ்சன் விஜேரத்ன கலந்து கொள்வார்.

(ண-032)

---

## உண்மையான...

பாலசிங்கம் குறுக்கிட்டு — எல்லாப் பத்திரிகையாளர்களும கேள்விகளைக் கேட்கலாம என்றார்- அப்போது —

பிரபா- அவர்கள்தான் எமமை மக்கள் முன கொண்டு வர விரும்புகிறார்கள்- கொண்டு வரட்டுமே!

மாத்தயா- நாங்கள் இருவரும [பிரபாவும மாத்தயாவும] உயிருடன் இருக்கிறோம என்பதை அவர்கள் மக்களுக்குத் தெரியப்படுத்துவார்கள்- எங்களுக்கு காயங்கள் ஒன்றும இல்லை-

பிரபா- அவர்களுக்கு (பத்திரிகையாளர்களுக்கு) இன்னொரு சந்தேகம- நான் உண்மையான பிரபாகரன்தானா என்பது [சிரிக்கிறார்]

பத்திரிகையாளர் சந்திப்பை நேற்றே வைத்துக் கொள்வோமென்றிருந்தோம- அப்படி வைத்திருந்தால் இன்று ஏப்ரல் முதலாம திகதி அது பற்றி செய்திகள் நீங்கள் பிரசுரித்திருப்பீர்கள்- ஒரு வேளை மக்கள் அதை "ஏப்ரல் பூல்" செய்தியாக கருதிவிடக்கூடும- அதனால் தான் சந்திப்பை இன்று வைத்தோம-

இப்படி அவர் கூறினார்-(உ)

---


**தினபதி**
**சிறு விளம்பரம்**

## தேவை

கண்டி மாவட்டத்திலுள்ள 40 ஏக்கர் தேயிலைத் தோட்டத்திற்கு வி பி வேலை தெரிந்த ஒரு கங்காணியும தே பியும உடனே தேவை- ஜனுப் அமீன், 72, இல்லவத்துறை, கமபளை-

031734

100 ஆவது படத்தில் நடிக்க இருக்கும்

# சந்திரசேகருக்கு செஞ்சரி போட அதிஷ்டம் அடிக்கிறது

அழகு தமிழாலும் அளவுடன் கூடிய அழுத்தமான நடிப்பாலும ரசிகர்களைக் கவர்ந்து திரை உலகில் தனி முத்திரையுடன் விளங்கும் சந்திரசேகர் மிக விரைவில் தன் 100 ஆவது படத்தில் நடிக்க இருக்கிறார்.

ஒரு குணமான வேடத்தைக் கொடுத்து செய்ய வேண்டும என்று எந்த டைரக்டர் ஒரு பாத்திரத்தை உருவாக்கினாலும உடனே அந்த வேடத்தை சந்திரசேகரிடம கொடுத்து விடுவது இப்போது ஒரு மரபாகி விட்டது!

சந்திரசேகரிடம உள்ள மிகப் பெரிய இயல்பு அவர் படவுலகில் அநேகமாக எல்லாருக்குமே நண்பராக இருப்பது தான்!

படவுலகில் பொதுவாக ஜெய்சங்கருக்குத்தான் நடிகர்கள் மிக அதிகம. அவர் அளவுக்கு சந்திரசேகரும நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு தன்னை எவருமே வெறுக்காமல் இருக்கும வகையில் அனைவருடனும பழகுகிறார்.

இந்தப் பக்கம ராதாரவி, அந்தப் பக்கம ராமராஜன் மற்றொரு பக்கம விஜயகாந்த் மற்றும பெரிய டைரக்டர்கள் எல்லாருமே சந்திரசேகருடன் மிக நட்புடன் பழகுகிறார்கள். சந்திரசேகருக்கு அப்படி ஒரு ராசி!

சந்திரசேகர் நமது நிருபருடன் உரையாடும போது கூறியதாவது—

எனக்கே ஆச்சரியமா இருக்கு. பழசை எல்லாம நினைச்சுப் பார்த்தா இது நிஜம தானா? என்று கூடத் தோன்றுகிறது. ஆரமப காலத்தில் எங்க அண்ணன் கருப்பத்தேவர் தேவி நாடக சபா நடிகராக இருந்த போது அவர் நடிப்பை மேடையில் பார்த்து பார்த்து என் நடிப்பு ஆசையை வளர்த்துக் கிட்டேன்.

சினிமா நடிப்பு வெறியுடன் சுமார் மூன்று வருடங்கள் பாரதிராஜா வீட்டு வாசலுக்கு அலைந்து அலைந்து கடைசியில் அவர் மனதில் இடமபிடித்தேன்.



சந்திரசேகர்

பிறகு புதியவார்ப்புகள் படத்தில் காலை ஊனமாக்கி விந்தி விந்தி நடக்குமபடி அதாவது அப்படி நடிக்குமபடி ராஜா சார் [பாரதிராஜா] செய்து விட்டார்.


அன்று படவுலகில் விந்தி விந்தி நடையெடுத்து வைத்த நான் இன்று அழுத்தமாக ஒவ்வொரு அடியையும நிதானமாக பார்த்துப் பார்த்து வைக்கிறேன்.

அதற்கு அன்று டைரக்டர் பாரதிராஜாவிடம கற்ற பாடங்களே காரணம!

"நீங்கள் ஒரு காலத்தில் தாடியுடன் எல்லாப் படங்களிலும நடித்தீர்கள். தாடி இருந்தால்தான் சந்திரசேகருக்கு ராசி என்று சொல்லி ஒரு இமேஜை ஏற்படுத்தி இருந்தார்கள் இல்லையா?"

"ஆமாம்... ஒருதலைராகம படத்தில் குறுந்தாடியுடன் ரோஜா கதை சொன்னேன். அதிலிருந்து தாடி என்னுடன் ஒட்டிக் கொண்டது. நிழல்கள் பாலைவனச் சோலை என்று பல படங்களில் தாடி சேகராகவே இருந்தேன்.

தாடி இருந்தால்தான் இந்த சந்திரசேகருக்கு நடிப்பு வரும என்ற இமேஜை நானே உடைத்துத் தள்ளிவிட்டேன். (இ-10)



ஆசையில் அணைக்க வந்தால் மௌசு காட்டுவது பெண்களது வாடிக்கைத்தானே இங்க விஜயகாந்த் ஆசையில் தவித்து எதையோ கூற அமலா கிராக்கி காட்டுகிறார் போல் தெரிகிறதே! ஏன் என்பதை "புதுப் பாடகன்" வந்ததும பார்த்திடலாம! [இ-10]

# கடை வீதியில் ரவுடிகள் கலாட்டா



# இரசாயன பொருட்கள் மூலம் புற்று நோய்

## சிறிமா கூறுகிறார்

கொழும்பு, ஏப் 2

பாரிய பல்தேச வர்த்தக நிறுவனங்கள் உற்பத்தி செய்து வரும பல்வேறு ரசாயனப் பொருட்கள் மக்களிடையே புற்றுநோய் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

ஆகவே இந்த இரசாயனப் பொருட்களின் தாக்கங்கள் பற்றி அரசாங்கம தீவிர கவனம செலுத்த வேண்டும.

இலங்கை புற்றுநோய் சங்கத்தின் வருடாந்த மாநாடு அதன் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா இவ்வாறு சொன்னார்.

திருமதி பண்டாரநாயக்கா இச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராவார்.

புற்றுநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும. புகைத்தல், வெற்றிலை போடுதல் போன்ற புற்று நோய்க் காரணிகளான பழக்கங்களில் இருந்து இளம சமூகத்தினரை காப்பாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும.

புற்றுநோயைக் குணப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை என்பது உண்மையானாலும கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இந் நோயைக் குணப்படுத்தும முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

எனது மாமியார் ஒருவரும புற்று நோயால் இறந்தார். அன்றிலிருந்து இந் நோயை சமூகத்தில் இருந்து ஒழித்துக்கட்டத் தான் உறுதிபூண்டேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

[இ-032]

# உல்லாசப் பயணத்துறையில் இளைஞர்களுக்கு பயிற்சி

காலி, ஏப் 1

தென் மாகாணத்தில் உல்லாசப் பயணத்துறையை மேலும அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம துரித செயல்திட்டங்களை வகுத்துள்ளது.

உல்லாசப் பயண விடுதிகள், ஹோட்டல்களில் பணிபுரிவதற்கென இளைஞர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப் படும.

வெளிநாட்டுப் பயணிகளை நன்கு உபசரித்து வழிகாட்டுவதற்கென (கைட்) பயிற்சிகளையும இளையதலைமுறையினருக்கு வழங்குவதற்கு தென் மாகாண சபை திட்டமிட்டுள்ளது.

தென் மாகாண முதல்வரும, ஐ தே கட்சியின் தென் மாகாண அமைப்பாளருமான திரு எம எஸ் அமரசிறி மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

காலி மாவட்டத்தைச் சேர்ந்த "கொக்கலை" என்ற இடத்தில் உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி தொடர்பாக கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இதற்குத் தலைமை வகித்து திரு அமரசிறி உரையாற்றினார். அவர் தொடர்ந்து இங்கு பேசியதாவது;—

தென் பகுதியிலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதிகளின் உரிமையாளர்கள் எதிர்நோக்கும பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களது குறைபாடுகள் தீர்த்து வைக்கப் படும.

உல்லாசப் பயணிகள் அச்சமின்றி நடமாடுவதற்குரிய சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படும.

தென் மாகாணத்தின் இயற்கை எழில் மக்களின் உபசரிப்புத் திறன், சீதோஷ்ண சுவாத்திய வாய்ப்புக்கள், என்பனவற்றை விரிவான முறையில் வெளிநாட்டுப் பயணிகளுக்கு உணரச்செய்து பெரும எண்ணிக்கையான வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை வருவிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் மாகாண சபை முக்கிய கரிசனையுடன் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு முதலமைச்சர் குறிப்பிட்டார்.

[இ-034]

## வங்கி இளையை இயங்க வைக்க நடவடிக்கை

மூதூர் மக்கள் வங்கிக் கிளையினை மீண்டும மூதூர் நகரில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையினை மக்கள் வங்கி உயர் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களாக மூதூர் மக்கள் வங்கிக் கிளை திருகோணமலை நகரில் இயங்கி வருகின்றது.

பாதுகாப்புக் கருதி 1985ஆம ஆண்டு முற்பகுதியில் மூதூரில் இருந்து திருகோணமலைக்கு மூதூர் மக்கள் வங்கிக் கிளை ஆவணங்கள் கொண்டு செல்லப் பட்டன.

இதனைத் தொடர்ந்து மேற்படி வங்கிக் கிளை திருகோணமலை உள்துறைமுக வீதியில் இயங்கி வருகின்றது.

## இறந்த திமிங்கலத்துக்கு பொலீஸ் பாதுகாப்பு

கொழும்பு, ஏப் 2

தெஹிவளைக் கடற்கரையில் ஒதுங்கிய திமிங்கிலம நாரா அதிகாரிகளினால் அப்புறப்படுத்தப்படும வரை இறந்த அத்திமிங்கிலத்துக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இத்திமிங்கிலத்தின் வயிற்றுப் பகுதியில் மாணிக்கக் கற்கள் காணப்படுவது வழக்கம என்ற பரமபரை நமபிக்கை மீனவர்களிடையே நிலவுகிறது. இதன் காரணமாக தெஹிவளை கடற்கரையில் ஒதுங்கிய திமிங்கிலத்தின் வயிற்றை வெட்டிப் பிளக்கும முயற்சியில் அப்பகுதி மீனவர்கள் கத்தி மற்றும கோடரிகளுடன் [illegible] ஆயத்தமாயினர்.

இதையடுத்தே தெஹிவளைப் பொலீஸ் நிலையத்தில் இருந்து ஒரு விசேஷ பொலீஸ் படை திமிங்கிலத்துக்குக் காவலாக அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ல-032).

## அட்டன் பள்ளிவாசல் அருகாமையில் உள்ள தங்கு விடுதி மூடப்படும்

### — செல்லச்சாமி உறுதி

அட்டன் ஏப் 1

அட்டன் ஜும்மா பள்ளி வாசலுக்கு அண்மையில் உள்ள தங்கும விடுதி மூடப் படும. பள்ளிவாசலுக்கும தங்கும விடுதிக்கும நடுவில்

வாசல் பரிபாலன சபை உறுப்பினர்கள் அமைச்சர் செல்லச்சாமியை சந்தித்து மேற்படி பள்ளி வாசல் சுற்றாடல் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

இப் பேச்சுவார்த்தையின்

திற்கு தொழுகைக்கும பெரும இடையூறாக இருப்பதாகவும அமைச்சரிடம பரிபாலன சபை உறுப்பினர்கள் முறையிட்டனர்.

இது சமபந்தமாக உடன்,

# ரவுடிகள் கலாட்டா

## ரஜனி எதிரிகளை பந்தாடினார்

மதுக்கடை, மினி ஸ்டால் ஹோட்டல், ஐஸ்கிரீம கடை, பியூட்டி பார்லர், ஜெராக்ஸ் கடை, போட்டோ ஸ்டுடியோ என்ற பலதரப்பட்ட கடைகளும கொண்ட சலசலப்பு நிறைந்த கடைவீதிக்குள் இன்ஸ்பெக்டர் ரஜனிகாந்த் நுழைந்தார்.

அவரைக் கண்ட பத்துக்கும மேற்பட்ட முரடர்கள் ரஜனியிடம் வமபு இழுத்தனர். வலியச் சென்ற ரஜனியை சண்டைக்கு தூண்டினார்கள்.

இதனால் ஆத்திரம அடைந்த ரஜனி முரடர்களிடம அதிரடி தாக்குதல நடத்தி அவர்களை பந்தாடினார்.


இந்தக் காட்சி "நாட்டுக்கு ஒரு நல்லவன" படத்தில இடமபெறுகிறது.

இதற்காக பெங்களூர் கான்ட்டிவீரா ஸ்டூடியோவில் பல லட்சம ரூபா செலவில் பிரமாண்ட சூப்பர் மார்க்கெட் அமைக்கப்பட்டது. சண்டைக் காட்சியில் கடைகள் அடித்து நொருக்கப்பட்டன.

கதை திரைக்கதை எழுதி முக்கிய வேடத்தில் நடித்து வி ரவிச்சந்திரன் டைரக்ட் செய்ய மதுசூதனன் ஒளிப்பதிவு செய்தார். ஹரர்ஸ்பாபு சண்டை காட்சி அமைத்தார். 70 எம எம ஸ்டீரியோ ஃபோனிக் 6 டிராக் ஒலி அமைப்பில் வளரும இதற்கு வைரமுத்து பாடல்கள் எழுத, அமசலேகா இசை அமைத்தார். ஆர் பி விஸ்வம வசனம எழுதுகிறார்.

இதில் ஜனதராஜ், டி எஸ் ராகவேந்தர், குஷ்பு, ஜூலி, மனோரமா உட்பட பலர் நடிக்கின்றனர்.

(இ-10)



ரஜனிகாந்த்

## இரவிலும் பகலிலும் பரவும் சந்தம்

நள்ளிரவும பகலும பரவும வசந்தம நீதானே... என மனோ - சித்ரா பாட, வித்யா சாகர் இசையில் ஆர் வி இன்டர் நேஷனலின் "ஒரு பறவையின் சரணாலயம" என்ற படத்துக்காக ஏவி எம ஒலிப்பதிவு கூடத்தில் ஒலிப்பதிவானது,

சித்ராலயா கோபு வசனம எழுத, ஆர் வடிவேலு தயாரிப்பு மேற்பார்வையில் என் ஸ்ரீதர் தயாரிக்க, எஸ் ராஜசேகரன் திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்யும படம "ஒரு பறவையின் சரணாலயம"

(இ-10)

# தங்கைக்கோர் தாலாட்டு வளருகிறது

ராகவேந்திராலயா சினி கிரியேஷன்ஸ் "தங்கைக்கோர் தாலாட்டு" படம ஊட்டியில் வளர்ந்து வருகிறது-

அர்ஜுன் - சீதா - ராமகிருஷ்ணன் - டெல்லிகணேஷ் - மோகன்பாபு - செந்தில் - கே ஆர் விஜயா புதுமுகம அருண குமாரி - ரேணு ஆகியோர் படப்பிடிப்பில் கலந்து கொண்டனர்-

இரண்டு பாடல் காட்சிகளும் ஒரு சண்டைக் காட்சியும கே எஸ் மணி ஒளிப்பதிவில் அங்கு படமாக்கப்பட்டது-

தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெறுகிறது-

வேகமாக வளர்ந்து வரும இந்தப் படத்திற்கு சங்கர் — கணேஷ் இசை அமைக்கிறார்கள்-

திரைக்கதை வசனம டைரக்ஷன் பொறுப்புகளை கே எஸ் மாதங்கன் கவனிக்கிறார்-

கதை எழுதி படத்தை தயாரிப்பவர் வில்லன் நடிகர் ராமகிருஷ்ணன்!

[இ—10]

**தினபதி சினிமா**

இதனைத் தொடர்ந்து மேற்படி வங்கிக் கிளை திருகோணமலை உள்துறைமுக வீதியில் இயங்கி வருகின்றது.

இப்பொழுது மூதூர் பிரதேசத்தில் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இவ் வங்கிக் கிளை மீண்டும மூதூர் நகரில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ-401)

அட்டன் ஜும்மா பள்ளி வாசலுக்கு அண்மையில் உள்ள தங்கும விடுதி மூடப்படும- பள்ளிவாசலுக்கும தங்கும விடுதிக்கும நடுவில் மதில் ஒன்று நிருமாணிக்கப்படும-

இவ்வாறு வாக்குறுதி அளித்தார் புதிய கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லசாமி-

அண்மையில் அட்டன் பள்ளி... அமைச்சர் செல்லச்சாமியை சந்தித்து மேற்படி பள்ளி வாசல் சுற்றாடல் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்-

இப் பேச்சுவார்த்தையின் போது பள்ளிவாசல் பரிபாலன சபை உறுப்பினர்கள் சமபந்தப்பட்ட தங்கும விடுதி தூர்நடத்தைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகப் பிரஸ்தாபித்தனர்-

இது பள்ளிவாசல் பரிபாலனத் திற்கு தொழுகைக்கும பெரும இடையூறாக இருப்பதாகவும அமைச்சரிடம பரிபாலன சபை உறுப்பினர்கள் முறையிட்டனர்-

இது சமபந்தமாக உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய மாகாண சபை உறுப்பினரும, இ தொ கா துணைச் செயலாளருமான திரு எஸ் இராஜுவை அமைச்சர் செல்லச்சாமி பணித்தார்-

# வடக்கு கிழக்கு கல்வி அபிவிருத்திக்கு ரூ. 6 கோடி ஒதுக்கீடு

தமபலகாமம, ஏப்- 1

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்கு மத்திய அரசு 6 கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளது-

இந்த நிதியிலிருந்து எதுவித புதிய வேலைத் திட்டங்களும மேற்கொள்ளப்படலாகாது என வும அரசு பணிப்புரை வழங்கியுள்ளது-

1989 ஆம ஆண்டு ஆரமபிக்கப்பட்டு முடிவுறாமல் இருக்கும வேலைகளுக்கு மாத்திரம இந் நிதியிலிருந்து செலவிடலாம-

மிகுதியான நிதியில் எதுவித புதிய வேலைத் திட்டங்களும மேற்கொள்ளப்படலாகாது-

[இ-288]

## தேயிலை தொழிற்சாலை: பணம் கொள்ளை

வெலிகாமம, ஏப்- 1

தென் மாகாணத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றில் இருந்த நான்கு லட்சம ரூபா கொள்ளையிடப்பட்டு இருக்கிறது-

எஸ் ஜீ சமரசேகர என்பவருக்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலையில் இருந்தே மேற்படி பணம கொள்ளையடிக்கப்பட்டு உள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்-

[இ-331]

புலிகளின் வேண்டுகோளுக்கு அமைய

# கிண்ணியாவில் மீண்டும் பஸ் சேவை

கிண்ணியா, ஏப்- 1

கிண்ணியாப் பகுதிக்குள் தற்போது மீண்டும பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன-

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரிலேயே இப் பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன-

திருகோணமலையிலிருந்து கிண்ணியா ஊடாக ஆலங்கேணிக்கும தமபலகாமம ஊடாக கிண்ணியாவிற்கும இப் பஸ் சேவைகள் நடைபெறுகின்றன-

முன்னர் இப் பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாண சபை அனுசரணையுடன் இப் பஸ் சேவைகள் ஆரமபிக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டன-

[இ-151]

மக்கொன பகுதியில்

# கருவாடு உற்பத்தி: பிரயாணிகள் அசௌகரியம்

கொழுமபு, ஏப் 2

பேருவளைத் தொகுதியைச் சேர்ந்த மக்கொனை பகுதியில் ஒருசாரார் பாதையில் கருவாடு உற்பத்தியை தமது அன்றாட தொழிலாக கொண்டுள்ளனர்-

இதனால் இப் பாதையில் செல்லும மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்

குறிப்பாக மக்கொனையில் கொழுமபு-காலி வீதியிலேயே கணிசமான அளவு கருவாடு உற்பத்தி செய்யப்படுகின்றது இந்த வீதியில் அமைந்துள்ள இந்திரில்ல பாலத்தின் இரு மருங்கிலும கூட கருவாடு உற்பத்தி செய்யப்படுகின்றது-

இப் பகுதிவாசிகள் இத் தொழிலை ஒரு நிரந்தர தொழிலாகவே கொண்டுவிட்டனர்-

பாலத்தின் இரு மருங்கிலும கொங்கிறீட் வேலியிலும கருவாடு காயவிடுவதால் பாதசாரிகளுக்கு இப்பாலத்தின் வாயிலாக போக்குவரத்து செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது-

கருவாட்டில் உள்ள உப்பு நீரினால் பாலமும பழுதடையும அபாயம ஏற்பட்டிருக்கிறது-

அத்துடன் மக்கொனை ஜும்மா பள்ளிவாசலுக்குக் கூட இந்த கருவாட்டு வாடை வீசுகிறது- இதனால் பள்ளிவாசலில் தொழுபவர்களும பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்

சமபந்தப்பட்ட அதிகாரிகள் இப் பாதை வழியாக சென்ற போதிலும இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்காததையிட்டு இப் பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்-

(-வ)

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4450
— 1990 ஏப்ரல் 3 —

## புதிய அமைச்சர்கள்

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச ஒரு கர்மவீரர். அவர் சாதனைகளை நோக்காகக் கொண்டே திட்டங்களை வகுப்பவர்; செயலில் இறங்குபவர்.

கடந்த வாரம் அவர் அமைச்சரவையை மாற்றி அமைத்தார். சூட்டோடு சூடாக புதிய அமைச்சர்களின் முன்னுள்ள 12 அடிப்படைப் பணிகளையும் கோடிட்டு வலியுறுத்தினார்.

நாடு இன்று இரண்டு அதி முக்கிய பிரச்சினைகளை எதிர் நோக்கியிருக்கிறது.

ஒன்று: அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு. இரண்டு: இளைஞர் சமுதாயம் முகம் கொடுக்கும் இன்னல்கள்.

இந்த இரண்டு பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டும்.

நாட்டை நெருடும் இந்த விவகாரத்தை அடி ஆதாரமாகக் கொண்டே ஜனாதிபதி அமைச்சர்களுக்கான 12 பணிகளையும் அறிவித்திருக்கிறார்.

நாட்டில் முன்னர் பயப்பிராந்தி நிலவியது. அமைதி சீர்குலைந்திருந்தது. இன்று அவை இல்லை.

ஆட்டம் கண்டிருந்த பொருளாதாரமும் இன்று உறுதியான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது.

இவற்றை ஜனாதிபதியின் சாதனை என்றே கூற வேண்டும்.

ஜனாதிபதி இப்போது விலைவாசிக்கு எதிராக ஒன்றிணைந்த போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார். அதற்கு காலக் கெடுவும் விதித்திருக்கிறார்.

புதிய அமைச்சர்கள் இந்தப் பணியை சரிவர நிறைவேற்றி அதிவிரைவான பயனை ஏற்படுத்திக் காட்ட வேண்டும்.

# சூரிய சக்தியின் பயனை முழு அளவில் பெறலாம்

## திபெத் வழி காட்டுகிறது

திபெத்தை உலகின் கூரை யென்று அழைப்பர்— இது கடல் மட்டத்தில் இருந்து 4,000 மீட்டர் உயரத்தில் இருக்கிறது— சூரிய சக்தியின் முழுப் பயனை அது பெறுகிறது— வருடமொன்றிற்கு 2,500இல் இருந்து 3000 மணித்தியாலங்களுக்கு சூரிய சக்தியை திபெத் பெறுகிறது—

சவூதி அரேபியாவை விட திபெத் சூடான பிரதேசமாகும் இங்கு வீட்டு வேலைகளுக்கும், ஏனைய தொழில்களுக்கும் கரியையோ அல்லது மண்ணெண்ணெய்யையோ பயன்படுத்துவதில்லை சூரிய சக்தியினாலேயே எல்லாத் தொழில்களும் நடைபெறுகின்றன.

20,000 தொன் நிலக் கரியை திபெத் மக்கள் சேமிக்கின்றார்கள்— 7300 சூரிய வெப்பத்தினால் சமைக்கும் அடுப்புகள் அங்கு உள்ளன—

சூரிய சக்தியின் அனுகூலங்களை பலவிதத்திலும் பெருக்க ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன— சூரிய சக்தியின் உதவியினால் விளக்குகள் எரிகின்றன—

ஆயினும் திபெத் மக்கள் இந்த ஆராய்ச்சிக்கு முன்னரே சூரிய சக்தியின் நன்மைகளை அறிந்திருந்தார்கள்— அவற்றைச் செயல்படுத்தவும் அறிந்திருந்தார்கள்—

திபெத்தில் சூரிய வெளிச்ச மாளிகை ஒன்று கட்டப்பட்டுள்ளது— இது 300 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகும்— இது 14அவது தலைலாமாவின் படுக்கை அறையாகும்— சூரிய வெளிச்சத்தை மாளிகைக்குள் உள்புகுத்த பெரும் ஜன்னல்கள் போடப்பட்டுள்ளன—

அங்கு வாழும் ஏழை மக்கள் பெருமுறையான ஜன்னல்களைப் போட முடியாது— அகவே ஜன்னல்களை காப்பு மையினால் பூசி மறைக்கவிடுவார்கள்— காப்பு சூரிய வெப்பத்தை அதிகமாக ஈர்க்கும் பலமவாய்ந்தது—

திபெத் ஒரு குளிர்ந்த பிரதேசமாகும்— அகவே சூரிய வெப்பத்தை அங்கு தேக்கி வைப்பது அவசியம்—

1960இல் கலாசாரப் புரட்சியின் பின் சூரிய சக்தியின் பயன் பற்றிய ஆராய்ச்சிகள் கடைப்பட்டன. 7970 ஆம் அண்டு மின்சாரத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது சூரிய சக்தியிலிருந்து மின் சக்தி பெற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன—

சூரிய சக்தியின் உதவியுடன் 10 கலன் தண்ணீரை 40 நிமிடங்களில் கொதிக்க வைக்கலாம்—

திபெத் கிராமவாசிகள் சமையலுக்கு சூரிய சக்தியையே பயன்படுத்துகின்றனர்—

பல நாடுகளில் இருந்து விஞ்ஞானிகள் திபெத்திற்கு வருகின்றனர்— சூரிய சக்தியிலிருந்து மேலும் பயன் பெறும் ஆராய்ச்சிகளை நடத்துகிறார்கள்—

(ம—455)

## பாணந்துறை ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைகள் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 2

பாணந்துறை ஆஸ்பத்திரியில் கடந்த சில மாதங்களாக சத்திர சிகிச்சைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன—

இதனால் நோயாளர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் எனக் கூறப்படுகிறது—


இந்த ஆஸ்பத்திரியின் சத்திர சிகிச்சைக்கு பொறுப்பான டாக்டர் ஏதோ அலுவலாக வெளிநாடு சென்றுள்ளார்—

இதனையடுத்தே இங்கு சகல சத்திர சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளன—

இந்நிலைமையினால் பாணந்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பல நோயாளர்கள் சத்திர சிகிச்சைக்காக கொழும்புக்கு அல்லது கொழும்பு தெற்கு பெரியாஸ்பத்திரிக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது—

பாணந்துறை பகுதி மக்கள் மட்டுமன்றி அதன் சுற்றுப்புற பகுதி மக்களும் சத்திர சிகிச்சைக்காக வரும் ஒரே ஆஸ்பத்திரி இதுவாகும்—

இந்த ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டதால் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்— (இ—வ)



## திறப்பு விழா

மர்ஹூம் ஏ எச் மாக்கான் மாக்காரின் பெயரில் ஞாபகார்த்த நூல் நிலையமொன்று அண்மையில் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம யூ சுல்தான்பாவா இந்த நூலகத்தைத் திறந்து வைத்தார்.

படத்தில் இடமிருந்து வலமாக கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம ஷுக்ரி ஜனாப் அஸ்ஹர் கவுஸ், பேராசிரியர் சுல்தான் பாவா, ஜனாப் ஏ ஐ எல் மரிக்கார் ஆகியோர் காணப்படுகின்றனர். (இ—007)

## சகல ஆலிம்களும் உலமா சபையில் அங்கம் பெற வேண்டும்

### ஜம் இய்யத்துல் சபையில் தீர்மானம்

கொழும்பு ஏப் 2

உலமாக்களின் அமைப்பு என்ற வகையில் சகல ஆலிம்களும் அகில இலங்கை ஜம இய்யத்துல் உலமாச் சபையில் அங்கம் பெற வேண்டும்—

அங்கீகரிக்கப்பட்டுள்ள மாவட்ட, உப மாவட்ட கிளைச் சங்கங்கள் தத்தமது பகுதிகளில் உள்ள ஆலிம்கள் அனைவரையும் ஜமஇய்யாரின் உறுப்பினர்களாக்குவதற்கான சகல முயற்சி

## இஸ்லாமிய வழிமுறைகளை முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும்

### அரபுக் கல்லூரி அதிபர்

கொழும்பு, ஏப் 2

இஸ்லாம சகலவற்றிலும எமக்கு முன்மாதிரியாக இருக்கிறது, ஆகவே முஸ்லிமகள் இஸ்லாமிய வழிமுறைகளை

அல்ஹாஜ் எம எம ஏ முபாரக் இவ்வாறு கூறினார்.

கொழும்பு கோட்டை ஜும்ஆப் பள்ளிவாசலில் பிர

## மஸ்கெலியாவில் பங்குனி உத்தரம்

மஸ்கெலியா, ஏப். 1

எதிர்வரும் எட்டாம திகதி ஞாயிற்றுக்கிழமை மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாத சுவாமி தேவஸ்தான பங்குனி உத்தர

## செய்தித் திரட்டு

### வீதியின் பெயரை மாற்றத் திட்டம்

கொழும்பு, ஏப் 2

இரத்தினபுரி பள்ளி வீதிக்கு "எல்லாவெல மாவத்தை" என பெயரிடப்படும்—

இரத்தினபுரி மாநகர சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது—

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான காலஞ்சென்ற நந்த எல்லாவெலயின் ஞாபகார்த்தமாகவே மேற்படி வீதிக்கு "எல்லாவெல மாவத்தை" என பெயரிடப்படவுள்ளது—

(இ-வ)

### ஆசிரியர் சங்க கிளைகள் புனரமைப்பு

பளை, ஏப் 1

அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தலையகம் கொழும்பு ஆகிய இடங்களில் தனது கிளைகளைப் புனரமைப்பு செய்கிறது—

பொதுச் செயலாளர் திரு த மகாசிங்கம், நிர்வாகச் செயலாளர் திரு த அருணகிரிநாதன் ஆகியோர் நேரடியாகச் சென்று அவ்விடங்களில் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டனர்—

அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாக உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் சென்று தமது பணிகளை மேற்கொள்வதுடன் காங்கு தொழிற்சங்க உறுப்பினர்களையும சந்திக்கவுள்ளனர்

(இ—227)

### ஆண்டு குரு பூசை

கொழும்பு, ஏப் 2

ஈழத்துத் திருநெறி தமிழ் மன்றம சிவயோக சுவாமிகளின் ஆண்டு குருபூசை தினத்தை விழாவாகக் கொண்டாட திட்டமிடப்பட்டிருக்கிறது—

இதில் சிவயோக சுவாமிகள் திருவடி பூஜை எதிர்வரும் 5 ஆம திகதி நடைபெறவுள்ளது—

வெள்ளவத்தை ருத்ரா மாவத்தையில் உள்ள சிவானந்த நிலையத்தில் இவ் விழா நடைபெறவுள்ளது—

...னார்.

புதிய அமைச்சர்கள் இந்தப் பணியை சரிவர நிறைவேற்றி அதிவிரைவான பயனை ஏற்படுத்திக் காட்ட வேண்டும்.

அவர்கள் அதிகாரிகளை மாற்றுவதிலும், திட்டங்களை மீள வரைவதிலும் வெளிப்பூச்சு, பகட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் விட்டு விட்டு கருமத்தில் இறங்க வேண்டும்.

அவர்களிடமிருந்து நாட்டு மக்களும ஜனாதிபதியும இப்போது எதிர்பார்ப்பது அதுதான்.

கொழும்பு, ஏப். 2

உலமாக்களின் அமைப்பு என்ற வகையில் சகல ஆலிமகளும அகில இலங்கை ஜமஇய்யத்துல் உலமாச் சபையில் அங்கம் பெற வேண்டும்.

ஆலிமகளுக்கு என்று அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்படும் வேறு எந்த அமைப்பிலும இவர்கள் சேரக் கூடாது.

இவ்வாறு சகல ஆலிமகளையும கேட்டுக் கொள்ளும ஒரு தீர்மானம அகில இலங்கை ஜமஇய்யத்துல் உலமாச் சபையின் மத்திய சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஜமஇய்யத்துல் உலமாவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மாவட்ட, உப மாவட்ட கிளைச் சங்கங்கள் தத்தமது பகுதிகளில் உள்ள ஆலிமகள் அனைவரையும ஜமஇய்யாவின் உறுப்பினர்களாக்குவதற்கான சகல முயற்சிகளையும மேற்கொள்ள வேண்டுமென்ற மற்றும ஒரு தீர்மானமும இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (இ—007)

# நோன்பானது ஏழைகளின்பசியை உணர்த்துகின்றது

## கூட்டத்தில் ஹஜ்ரத் ராஸிக் மௌலவி

மஸ்கெலியா, ஏப். 1

நோன்பானது ஏழைகளின் பசியை உணர்த்துகின்றது. அதனால் எளியோருக்கு உதவும மனப்பான்மை வளருகின்றது.

மஸ்கெலியா பள்ளிவாயல் இமாம ஹஜ்ரத் ராஸிக் மௌலவி இவ்வாறு கூறினார்.

மஸ்கெலியா முஸ்லிம வித்தியாலயத்தில் புனித ரமழானை முன்னிட்டு அண்மையில் கூட்டம ஒன்று நடைபெற்றது.

இதற்கு மஸ்கெலியா முஸ்லிம வித்தியாலய அதிபர் ஜனாப எஸ் எப் எ றவூக் தலைமை வகித்தார். இங்கு உரையாற்றிய மௌலவி மேலும் கூறியதாவது.

நோன்பு எமது போது மனிதன் தனது உணவைக் குறைத்துக் கொள்வதுடன் உடல் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தப் பழக்கிக் கொள்கிறான்.

மிகை உணவு மனிதனை தூங்க வைப்பதோடு களைப்பினையும ஏற்படுத்தும. நோன்பிருக்கும போது எமது உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுவதோடு சிந்தனையும ஊற்றெடுக்கும.

அதன் காரணமாக மற்றவர்களைப் பற்றியும உதவி செய்யும மனப்பான்மையும ஒருவரை ஒருவர் புரிந்துக் கொள்ளும தன்மையும உருவாகும.

இதனால் மனித குலம வளர்ச்சியுறும. எங்களுக்குள் இருக்கும உயர்வு, தாழ்வு போன்ற பேதங்கள் அகலும.

இதனை உணர்ந்து செயற்படின் நிச்சயமாக நாம நோன்பின் பூரணப் பலனை பெற முடியும.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆசிரியர் ஜனாப் பி எம மீரா மொஹிதீன் நன்றியுரை தெரிவித்தார். (இ—408)

# புனித ரமழான் சிந்தனைகள்

ஆத்மாவின் மீதும அதனை (மனிதனாக) உருவாக்கியவன் மீதும —

அதன் நன்மை தீமைகளை அதற்கு அறிவித்தவன் மீதும சத்தியமாக —

எவன் (பாவங்களை விட்டும) தன்னைப் பரிசுத்தமாக்கிக் கொண்டானோ, அவன் நிச்சயமாகச் சித்தி அடைந்து விட்டான் —

எவன் அதனைப் (பாவத்தில்) புதைத்து விட்டானோ, அவன் நிச்சயமாக நஷ்டம அடைந்து விட்டான்.

(அத் 91 — வசனம 7 — 10)

ரமழானின் இந்த சிரிய நாட்களிலே நாம பாவச் செயல்களைப் புரியக் கூடாது.

பாவமான காரியங்களைத் தவிர்க்க வேண்டும.

வாழ்நாள் முழுவதும நல்ல காரியங்களையே செய்ய வேண்டும.

சிறந்த முஸ்லிமகளாக எமமை மாற்றிக் கொள்ள வேண்டும.

பாவங்களை விட்டு தன்னைப் பரிசுத்தமாக்கிக் கொண்டவனே நிச்சயம சித்தி அடைந்து விட்டான் என்று குர்ஆன் கூறுவதை நாம ஆழமாகச் சிந்திக்க வேண்டும.

முஸ்லிமகளாகிய நாம எமது நடத்தை மூலமும, செயற்பாடுகள் மூலமும உதாரண புருஷர்களாகத் திகழ வேண்டும.

ரமழானில் நாம பெறும அரிய பயிற்சிகள் எமது முன்னேற்றத்துக்கே வழிவகுக்கின்றன

ஆகவே, பரிசுத்தவான்களாக, மாற நாம உறுதி பூணுவோம.

ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!!!

* நோன்பின் நிய்யத்து

நவைத்து ஸவ்மகதின் அன் அதாயி பர்ழி ரமழானி ஹாதிஹிஸ்ஸனதிலில்லாஹி தஆலா.

இந்த வருடத்தின் ரமழான் மாதத்தின் பர்ளான நோன்பை அதாவாக நாளைப் பிடிக்க நிய்யத்து செய்கிறேன், அல்லாஹ்வுக்காக!

* நோன்பு திறக்கும துஆ

அல்லாஹும்ம லகஸும்து வபிக ஆமன்து வஅலைக்க தவக்கல்து வஅலா ரிஸ்கிக அப்தர்து பரஹ்மதிக யா அர்ஹமர் ராஹிமீன்

அல்லாஹ்வே! உனக்காகவே நோன்பு நோற்றேன். உன்னையே விசுவாசித்தேன்.

உன் மீதே எனது காரியங்களையும சாட்டினேன்.

உன் ஆகாரத்தைக் கொண்டே நோன்பு திறந்தேன்.

அகவே நான் நோற்ற நோன்பை அங்கீகரித்து அருள் புரிவாயாக! ஆமீன்!

— எப் எம பைரூஸ்

கொழும்பு, ஏப் 2

இஸ்லாம சகலவற்றிலும எமக்கு முன்மாதிரியாக இருக்கிறது. ஆகவே முஸ்லிமகள் இஸ்லாமிய வழிமுறைகளையே பின்பற்றி நடக்க வேண்டும.

மகரகமை கபூரிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி அல்ஹாஜ் எம எம ஏ முபாரக் இவ்வாறு கூறினார்.

கொழும்பு கோட்டை ஜும்ஆப் பள்ளிவாசலில் பிரசங்கம நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

மௌலவி முபாரக் தொடர்ந்து கூறியதாவது.

இன்று முஸ்லிம சமூகத்தில் பல அனாசாரங்கள் தலை தூக்கியுள்ளன.

ஒருவர் மரணமானதன் பின்னர் அவருக்கு ஒரு வருடத்தில் பூர்த்திவிழா என்று கொண்டாட்டம எடுக்க முஸ்லிமகள் என்று எடுக்க முஸ்லிமகள் என்று கூறிக் கொள்வோர் முற்பட்டு உள்ளனர்.

இஸ்லாமிய உயரிய வாழ்வை உதறித் தள்ளி விட்டு பிற நாகரீகங்களுக்கு அடிமைப்படக் கூடிய சமூகமாக முஸ்லிமகள் ஆளாகி வருகின்னர்.

ஒருவர் பிறந்ததற்காக எத்தனை விழாக்கள், அதே போல் இறந்ததற்காக பூர்த்தி விழா. ஆனால் இஸ்லாம மரணித்தோருக்குச் செய்யும கடமைகளாக இவற்றைக் குறிப்பிடவில்லை.

இப்படி அவர் கூறினார். (ல—007)

மஸ்கெலியா, ஏப். 1

எதிர்வரும எட்டாம திகதி ஞாயிற்றுக்கிழமை மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாத சுவாமி தேவஸ்தான பங்குனி உத்தர தேர்த் திருவிழா நடைபெற உள்ளது.

அன்றைய தினம காலை அபிஷேகமும விசேஷ பூசையும மாலை வசந்த மண்டப அலங்கார பூசையைத் தொடர்ந்து இரத மகோற்சவமும நடைபெறும.

இதற்கான ஏற்பாட்டை மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையினரும ஸ்ரீ சண்முகநாத சபையினரும மேற்கொண்டு வருகின்றனர். (இ—408)

...திகதி நடைபெறவுள்ளது.

வெள்ளவத்தை ருத்திரா மாவத்தையில் உள்ள சிவானந்த நிலையத்தில் இவ் விழா நடைபெறவுள்ளது.

விழா ...வில் மகேசுர பூசையும இடமபெறும.

[இ—404]

## சிரமதானப் பணி

கிண்ணியா, ஏப் 1

அலங்கேணி கொத்தணியின் கீழுள்ள தி பவரசந்திவு அ மு க பாடசாலையில் மாபெரும சிரமதானப் பணி ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வித்தியாலய அதிபர் ஜனாப் எஸ் ஏ எம பாறூக் தலைமையில் இப் பணி நடைபெற்றது.

இச் சிரமதானம் மூலம தற்காலிக கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டதுடன் வேலி ஒன்றும புனருத்தாரணம் செய்யப்பட்டது.

[இ—151]

# அக்குரஸ்ஸ – கொழும்பு பஸ் சேவை சீர்கேடு

வெலிகாமம, ஏப். 1

அக்குரஸ்ஸ இ போ ச பஸ் டிப்போவினால் அக்குரஸ்ஸையில் இருந்து காலி, மாத்தறை - வெலிகாமம கொழும்பு தெலிஜ்ஜவில, இமதுவ ஆகிய பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும பஸ் சேவைகள் தினமும சீர்கேடடைந்து வருகின்றன.

இதனால் பிரயாணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சில வேளை பஸ்ஸுக்காகப் பல மணி நேரம காத்திருந்து ஏமாற்றமடைய வேண்டிய அவல நிலையும ஏற்படுகிறது என புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதனால் சீசன் டிக்கட் வாங்கியிருக்கும பாடசாலை மாணவர்களும அரசாங்க ஊழியர்களும அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அக்குரஸ்ஸ பஸ் டிப்போவினால் முன்னர் சுமார் 66 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இவைகளில் 40 பஸ்கள் நாசகாரச் செயல்களினால் சேதமாக்கப்பட்டன.

இதனால் தற்பொழுது சுமார் 20 பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன

மக்கள் பிரச்சினையில் தினபதி

தெனாலே சிறந்த முறையில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை உருவாகி உள்ளதாக பஸ் டிப்போ உயர் அதிகாரி ஒருவர் இது பற்றி கருத்துத் தெரிவித்தார். (இ—331)

# நேபாளத்தில் ஒன்பது அமைச்சர்கள் நீக்கம்

## அரசு எடுத்த நடவடிக்கைக்கு அதிருப்தி தெரிவித்ததன் எதிரொலி

காத்மண்டு, ஏப். 2

நேபாளத்தில் ஒன்பது அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். அரச அதிருப்தியாளர்களுக்கெதிரான ஒரு நடவடிக்கையை எதிர்த்த காரணத்தாலேயே இவர்கள் பதவி இழந்தனர்.

நேபாள மன்னர் விரேந்திரா ஞாயிற்றுக்கிழமை ஒன்பது அமைச்சர்களை நீக்கினார். வெள்ளியன்று வெளிநாட்டமைச்சர் ஷைலேந்திர குமார் உபாத்யாயா பதவி இழந்தார்.

நேபாளத்தில் மாரிச்மான் சிங் ஸ்ரேஸ்தா பிரதமராகப் பதவி வகிக்கின்றார். அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என இவரே சிபார்சு செய்தார்.

நேபாளத்தின் பஞ்சாயத்து முறையை எதிர்த்து கடந்த 18 ஆம் திகதி இங்கு பல வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

தடை செய்யப்பட்ட அரசியல் கட்சியினரே இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அரசாங்கம் இவ்வாறு கலைக்கப்பட்டு பஞ்சாயத்து முறையை அவமதித்தது போன்ற ஒரு செயலாகும்.

இவ்வாறு பஞ்சாயத்து (தேசிய சபை) அரசின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான கேஷா பகதூர் பிஸ்ட்டா கூறினார்.

பஞ்சாயத்து முறை ஜனநாயகம் நிலைக்க உதவுவதாக அரசு கூறுகிறது.

எம் ஆர் டி என அழைக்கப்படும் எதிர்ப்பு இயக்கம் கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளுடன் இணைந்து அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அரசு கூறுகிறது.

நேபாளத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்களை விடுத்த ஏனையோரில் பலருக்கு வேறு பதவிகள் வழங்கப்பட்டன.

(எ)

## அமெ. இலக்குகளை தாக்க பிலிப்பைன்ஸ் கிளர்ச்சியாளர் முடிவு

மணிலா ஏப் 2

பிலிப்பைன்ஸில் உள்ள அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படுமென கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அத்தோடு மணிலாவுக்கு பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளுக்கென உதவி வழங்குவதை ஜப்பான் நிறுத்திக்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

புதிய மக்கள் இராணுவம் [என் பி ஏ] என அழைக்கப்படும் கிளர்ச்சிப் பிரிவினரே இவ்வாறு எச்சரித்துள்ளனர். அவர்களின் இலக்குகள் மீதும் தாக்குதல் நடத்தப்படும். இவ்வாறு கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸில் இரு அமெரிக்கத் தளங்கள் இயங்குகின்றன. பிரதான தளங்களான இந்த இரண்டிலும் சுமார் 12000 அமெ படை வீரர் உள்ளனர்.

[எ]

## இங்கிலாந்தின் பழம்பெரும் சிறையில்: கைதிகளால் கலகம் பெருந்தீ மூண்டது

# உலகச் செய்திகள்

## கறுப்பின மக்களுக்கெதிரான இரக்கமற்ற செயல்களை பொலீஸார் நிறுத்த வேண்டும் —மண்டேலா

மொதவெல் ஏப் 2

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் கறுப்பின மக்களுக்கு எதிரான பொலீஸாரின் இரக்கமற்ற செயல்கள் நிறுத்தப்பட வேண்டுமென கறுப்பர் தலைவர் நெல்சன் மண்டேலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வாறு நிறுத்தப்படாவிட்டால் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் [ஏ என் ஸி] பிரிட்டோரிய அரசுடன் திட்டமிட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளுமென அவர் கூறினார்.

பொலீஸார் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றனர். இது நிறுத்தப்படுவது அவசியம் என மண்டேலா குறிப்பிட்டார்.

வெள்ளையர் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவென்ற கறுப்பர் தலைவரின் முடிவு இதுவரை செயலில் காட்டப்படவில்லை என தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப் டபிள்யூ டி கிளார்க்கை வெள்ளையர்களான எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர்.

இதனையடுத்தே மண்டேலா மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

பத்திரிகையாளருக்கு மண்டேலா இது தொடர்பாக பேட்டியொன்றினையும் அளித்தார்.

[எ]

## இந்திய, நேபாள வர்த்தக நெருக்கடி

## ஒப்பந்தம் செய்ய முன்னர் நாடாளுமன்ற விவாதம் அவசியமென ஆலோசனை

காத்மண்டு ஏப் 2

சர்ச்சைக்குரிய இந்திய - நேபாளம் வர்த்தக நெருக்கடியைத் தீர்த்து வைக்க இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முன்னர் அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

இவ்வாறு நேபாளம் சட்ட சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் நேபாளம் வெளிநாட்டமைச்சர் கிருஷ்ணராஜ் அர்யால் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை ஞாயிறன்று வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடத்தப்பட்ட பின்னரே ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது பற்றிய முடிவு எடுக்கப்பட வேண்டுமென அவர் கூறினார்.

நேபாளம் - இந்திய வர்த்தக நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் ஞாயிறன்று ஆரம்பமாகின.

பேச்சுவார்த்தைகளை திங்களும் தொடர்வதென இரு தரப்பினரும் முடிவு செய்திருந்தனர். அவை பலனளிக்கக் கூடியனவாக இருந்தது எனவும் கூறப்படுகிறது.

[எ]

## தியனன்மென் சதுக்கத்தில் பாதுகாப்பு ஜரூர்

பீக்கிங் ஏப் 2

பீக்கிங்கில் தியன் அன்மென் சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் இங்கு ஜனநாயகப் போராட்டம் நடத்தியவர்கள் தாக்கப்பட்டனர். இச்சம்பவம் நடந்து ஓராண்டு பூர்த்தியாகும் தினம் அண்மித்துள்ளது. அங்கு அமைதியின்மை ஏற்படலாம் என அரசு கருதுவதால் இப்போதிருந்தே பாதுகாப்பினைப் பலப்படுத்தியிருக்கிறது.

பாரா இராணுவ துருப்பினரும் பொலீஸாரும் இயந்திரத் துப்பாக்கிகளுடன் தியன்அன் மென் சதுக்கப் பகுதியில் காணப்பட்டனர்.

வெளிநாடுகளில் வாழும் சீன அதிருப்தியாளர்களின் தூண்டுகோலால் தியன்அன் மென் சதுக்க சம்பவத்தை முன் வைத்து அமைதியின்மையை ஏற்படுத்த பலரும் முயலலாம் என அஞ்சப்படுகிறது.

[எ]

## மணமகளுக்கு அதிக சீதனம் வாங்குவதை நிறுத்த வலியுறுத்து

ஷார்ஜா, ஏப் 2

சீதனம் வாங்குவதை தந்தையர் நிறுத்த வேண்டும். தம் பெண்களை திருமணம் செய்து வைக்கும் போது பெருந் தொகையான பணத்தை மணமகனிடமிருந்து எதிர்பார்ப்பதை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ஷார்ஜா மன்னர் ஷேக் சுல்தான் பின் மொகமட் அல் குவாசிம் கோரியிருக்கிறார்.

100,000 டாலர்களுக்கும் அதிகமாக சீதனம் கோரப்படுவதால் ஷார்ஜாவில் உள்ள ஆண்கள் உள்ளூர் யுவதிகளை விடுத்து எகிப்து, இந்தியா போன்ற நாடுகளில் மணப் பெண்களை எடுக்க முயல்வதாக அவர் தெரிவித்தார்.

(எ)

## தெ. மா. சபை உறுப்பினர்: தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, ஏப் 2

புதிய மக்கள் இராணுவம [என் பி ஏ] என அழைக்கப் படும கிளர்ச்சிப் பிரிவினரே இந்த எச்சரிக்கையை விடுத்திருக் கின்றனர்-

அமெரிக்கர்கள் ஒரு நிமி டம கூட எமது நாட்டில் இருக் கத் தேவையில்லை- அவர்களது ஏகாதிபத்தியத்தை எடுத்துக் காட்டும் விதத்திலேயே இவர் கள் இங்கு தங்கியிருக்கின்றனர்-

பயங்கரவாத எதிர்ப்பு நட வடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கர்கள் தாக்கப்படு

## முற்றுகையில் கைது

டாக்கா, எப் 2

வங்காள தேசத்தில் போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகள் ஒரு ஹோட்டலில் நடத்திய திடீர் சோத னையின் போது நைஜீரிய நாட்டவர் ஒருவர் கைதா னார்-

20 லட்சம டாலர்கள் பெற மதியான போதைப் பொருள் இவரிடமிருந்து கைப்பற்றப்பட் டது-

(எ-ரி)

# பெருந்த மூண்டது

மான்செஸ்டர் இங்கிலாந்து, ஏப். 2

இங்கிலாந்தின் மிகப் பழைமை வாய்ந்த சிறைச்சாலை ஒன் றில் நூற்றுக்கணக்கான கைதி கள் கலகத்தில் இறங்கினர். அங்கு பரவிய பெருந் தீ காரணமாக சுமார் 500 பேர் காயமடைந்தனர்.

1868 இல் 970 கைதிகளுக் காகக் கட்டப்பட்ட ஸ்ரேன்ஜ் வேய்ஸ் சிறைச்சாலையில்தான் இப்பயங்கரம நடந்தது. இச் சிறைச்சாலையில் இன்று 1600 பேர் சிறைவாசம் அனுபவிக்கின் றனர். இடவசதி போதாமை யால் மாற்றங்கள் கேட்டே கைதிகள் கலவரங்களில் இறங் கத் தொடங்கினர்.

உடற் பயிற்சி அரங்கிலும கோவிலிலும ஏற்பட்ட தீயினால் ஒரு பிரளயமே ஏற்பட்டது. கைதி கள் சிறைச்சாலைக் கூரைகளில் நின்று தியணைக்கும படையினருக் கும கலகம அடக்கும பொலீ ஸாருக்கு கையில் அகப்பட்டதை வீசித் தடுத்தனர். கைதிகளின் சகாக்களால் மேலும பல இடங் களில் தீ வைக்கப்பட்டது.

13 பேர் இறந்ததாக ஊகிக் கப்படுகிறது. சுமார் 50 பேர் காயமடைந்ததாக பொலீஸார் கூறினர். (எ-ரி)

## அடிஸ்அபாபாவில் குண்டு வெடிப்பு

நைரோபி, ஏப். 2

அடிஸ் அபாபாவில் ஹில் டன் ஹோட்டலில் குண்டு வெடிப்பொன்று இடமபெற் றது. இதில் எவரும காயப் படவில்லை.

எதியோப்பிய அரசாங்கத்தி னால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை ஒன் றில் இப்படித் தெரிவிக்கப்பட்டி ருக்கிறது-

[எ-ரி]

## லண்டனில் 300 பொலிஸார் காயம்

லண்டன் ஏப் 2

லண்டனில் சர்ச்சைக்குரிய வரிச் சட்டம ஒன்றை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட் டம ஒன்றில் சுமார் 300 பொலீஸார் காயமடைந்த னர்-

லண்டன் மேற்கு மாவட்ட மொன்றில் இந்த ஆர்ப்பாட்டம இடம பெற்றது-

ஆர்ப்பாட்டக்காரர்கள் சூறை யாடல்களிலும ஈடுபட்டதாக பொலீஸார் கூறினர்- ஆறுமணி நேரப் போராட்டத்தி பொலீஸார் காயமடைந் தோடு பலர் கைது செய்யப்பட டனர்-

[எ]

அறிக்கை ஒன்றை ஞாயிறன்று வெளியிட்டார்- கூறப்படுகிறது-

[எ]

# ஸிம்பாப்வே தேர்தல்: முகாபே மீண்டும் வெற்றி

ஹராரே, ஏப். 2

ஸிமபாப்வே தேர்தலில் ஜனாதிபதி ரொபர்ட் முகா பேயின் ஆளும ஸேனு கட்சி மீண்டும வெற்றியீட்டியது.

ஞாயிறன்று இதுபற்றி அறிவிக் கப்பட்டது. புதிய நாடாளுமன் றத்துக்கான 120 ஆசனங்களில் 117 ஆசனங்கள் முகாபேக்கு கிடைத்துள்ளன.

ஸிமபாப்வே ஐக்கிய இயக்க மான சர்ச்சைக்குரிய முன்னாள் ஆளும கட்சி செயலாளர் நாய கம எட்கார் டிக்கேரேக்கு இர ண்டு ஆசனங்கள் கிடைத்தன.

எதிர்க்கட்சியினர் தேர்த லில் குழறுபடிகள் உண்டு என் கின்றனர்.

மீண்டும பதவிக்கு வந்த ரொபர்ட் முகாபே தனிக்கட்சி ஆட்சியை உருவாக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-ரி)

# மத். மாகாணத்தில் தரீக்கா பிரசார ஜமாஅத் பணிகள்

கொழும்பு, ஏப் 2

அகில இலங்கை ஜமஇயத் சுப்பாஹுஷ்ஷாதுலியின் (அனை த்திலங்கை சாதுலிய்யா இளை ஞர் இயக்கம) மத்திய மாகாணத்தில் தரீக்கா பிர சார ஜமாஅத் பணிகளை மேற்கொண்டது-

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி ம எம முஹிய்யித்தீன் ஆலிம (டிஹ்ஜி) இந்த ஜமா அத்து தத் தலைமை வகித்தார்-

கமபளை ஸாவியாவில் ஆரம பமான ஜமாஅத் வேலைகள் கமபளை கஹடபிடி பள்ளி வாசல் தர்ஹா, உலப்பன்ன ஜும்ஆப்பள்ளி வாசல், கண்டி கடுகல ஜும்ஆப் பள்ளிவாசல், கமபளை கேட் ஜும்ஆப் பள்ளி வாசல், இல்லவ துறை தக் கியா பள்ளிவாசல், ஆகிய இடங்களில் தமது பணிகளை மேற்கொண்டது-

அகில இலங்கை சாதுலிய்யா இளைஞர் இயக்கத்தின் கிளை களிலிருந்து பிரதி நிதிகள் கலந்து கொண்ட இந்த ஜமாஅத்தில் சீனன்கோட்டை வாலிபர் ஹஸரா ஜமாஅத் பிரதிநிதி களும பங்குகொண்டனர்-

கமபளை ஸாவியாவில் இளை ஞர்களுக்கான பயிற்சி மஜ்லிஸ் ஒன்றும நடைபெற்றது-

இந் நிகழ்ச்சிகளில் இப்பகுதி யில் உள்ள உலமாக்கள். பிர முகர்கள். முகத்தமீன்கள் உட்பட பெருந்திரளான இக்வான்களும கலந்து கொண்டனர்-

(ல-007)

# தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, ஏப் 2

தீவிரவாத நடவடிக்கைக ளில ஈடுபட்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைது செய் யப்பட்டுள்ள தென் மாகாண சபை உறுப்பினர் ஒருவரும மேலும மூவரும ஏப்ரல் பதி னோராம திகதி வரை விளக் கமறியலில் வைக்கப்பட வேண்டுமென கொழும்பு புலதிக மாஜிஸ்திரேட் கே எச் சுமித்ரபால உத்தரவிட் டார்-

அமபாந்தோட்டையைச் சேர் ந்த குணரத்ன கமகே நந்தசேன, கண்டியைச் சேர்ந்த ஜே ஏ தர்ம சேன, அமபலாந்தோட்டையைச் சேர்ந்த ஈ ஏ விஜேசேகர, நக் குளுகமுவையைச் சேர்ந்த ஜே வித்தான கமகே ஆகிய நால் வரே சந்தேக நபர்களாவர்-

பொலீஸ் விசாரணைகளின் பிரகாரம கடந்த ஆண்டு ஆகஸ்ட் 26 இல் காலி நகர சபைக் கட்டிடத்துக்கு அருகே நடைபெற்ற குண்டு வெடிப்புச் சமபவத்துக்கும இச் சந்தேக நபர்களுக்கும இடையே தொடர் புகள் இருக்கின்றன-

இச் சந்தேக நபர்கள் புரிந் துள்ள குற்றங்கள் பற்றி பல்வேறு பொலீஸ் நிலையங்கள் ஊடாக விசாரணைகள் நடைபெற்று வரு கின்றன-

இவ்வாறு பொலீஸார் நீதி மன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டிருந்தது- தமது விசாரணைகள் பூர்த்தியாகும வரை சந்தேக நபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட வேண்டும என அறிக்கையில் பொலீஸார், நீதிமன்றத்தைக் கோரியிருந்த னர்-

சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி சந்ரா டி சில்வா ஆஜராகியிருந்தார்-

[ல-032]

# மட்டக்களப்பு கல்வி திணைக்களத்திற்கு 840 நூல்கள் கையளிப்பு

மட்டக்களப்பு, ஏப் 1

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளின் நூல் நிலை யங்களுக்கு வழங்குவதற் கென 840 நூல்கள் மட்டக் களப்பு கல்வித் திணைக்களத் திற்கு கலாசார விளையாட் டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது-

இந்நூல்களை கலாசார பிர திப் பணிப்பாளர் திரு எஸ் எதிர் மனசிங்கம மட்டக்களப்பு பிரதி கல்விப் பணிப்பாளர் திரு தே சோமசுந்தரத்திடம கையளித் தார்-

நாவல், ஆக்க இலக்கிய நாடகம ஆகிய துறைகளைச் சார்ந்த இந்நூல்களின் மொத் தப் பெறுமதி 35 ஆயிரம ரூபா வாகும- 22 வகையான ஈழத்து எழுத்தாளர்களின் படைப்பிலக்கி யங்கள் இதில் அடங்கியிருந்தன-

கல்முனை கல்வித் திணைக் களத்திற்கும சுமார் 20 ஆயிரம ரூபா பெறுமதியான 345 புத்த கங்கள் வழங்கப்பட்டன-

இவை அமமாவட்டங்களி லுள்ள பாடசாலை நூல் நிலை யங்களுக்கு வழங்கப்படுமென கலாசாரப் பிரதிப் பணிப்பாளர் திரு எஸ் எதிர்மனசிங்கம தெரி வித்தார்- (ஐ)

# மண்டேலா-கிளார்க் சந்திப்பு விரைவில்

ஜொஹன்ஸ்பேர்க், ஏப். 2

அண்மையில் தென் ஆபிரிக் கச் சிறையிலிருந்து விடுதலை யான கறுப்பர் இனத் தலை வர் நெல்சன் மண்டேலா தான் விடுதலையான பின்னர் நாடு முழுவதும நடக்கும வன்செயல்களையிட்டு ஜனா திபதி கிளார்க்கைச் சந்திக்க இருப்பதாக செய்தியாளர் களிடம சொன்னார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும சுலு இங் காதா இயக்கத்தினருக்கும இடை யில் நட்டால் மாகாணத்தில் கலவரங்கள் மூண்டு ஆயிரக் கணக்கானோர் இறந்துள்ளனர் சமபவம நடந்த மாகாணத்திற்கு சென்ற பின்னரே ஜனாதிபதியைச் சந்திக்கப் போவதாக மண் டேலா சொன்னார்.

ஞாயிறன்று நடக்கவிருந்த ஊர்வலம 13 பேர் கொல்லப் பட்டதாக வந்த செய்தியால் தடைப்பட்டது. (எ-ரி)

# மலையக பாடசாலைகளின் கல்விதரத்தை உயர்த்த முயற்சி

மஸ்கெலியா, ஏப் 1

'சீடா நிறுவனத்தின் நிதி உதவியுடன் கல்வியமைச்சு பெருந் தோட்டப் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு சீடா செயற்திட்ட அதிகாரி திரு சி நவரட்ன கூறினார்.

கணிதப் பாட இலவச திறன் விருத்தி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களால் அண்மையில் பிரியாவிடை வைபவமொன்று நடத்தப்பட்டது.

மஸ்கெலியா சாந்த ஜோசப் தமிழ் மகா வித்தியாலய அலுவலக மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு மேற்படி கணித ஆசிரியரான திரு பி எம மீராமொகிதீன் தலைமை வகித்தார்".


இங்கு நவரட்னம தொடர்ந்து கூறியதாவது:-

இன்றைய நடைமுறை உலகில் கணிதம இன்றியமையாதது இதனை உணர்ந்து பாடசாலையில் சித்தியடையத் தவறியவர்களுக்கு இவ்வாறான திறன் விருத்தி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் இக் கணிதப் பாட வகுப்பினை நடத்திய ஆசிரியரது பங்களிப்பு உயர்வானது. தனித்துவமானது. இதனை மாணவர் உணர்ந்து ஒழுகுதல் வேண்டும.

இவ்வாறு கூறினார். இங்கு வித்தியாலய உப அதிபரான திரு எஸ் துரைசாமி வித்தியாலய ஆசிரியரும, சாமஸ் கல்வி கிளையை ஆசிரியருமான திரு பெ செல்வராஜ் உட்பட பலர் உரையாற்றினார்.

(இ-408)



## புற்றுநோய்க் கருத்தரங்கு

வெலிப்பன்ன வை எம எம ஏ அண்மையில் புற்றுநோய்க் கருத்தரங்கை நடத்தியது. இதில் கலந்துகொண்ட பிரதம அதிதி மேல் மாகாண சபை அங்கத்தவர் திரு அனில்குமார் விஜயசிங்கவை இயக்கத் தலைவர் ஜனாப் ஏ டபிள்யூ எம அஸார் மாலையிட்டு வரவேற்பதையும, இதில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும படத்தில் காண்க.

களு-வெலிப்பன்ன முஸ்லிம வித்தியாலயத்தில் இப் புற்றுநோய்க் கருத்தரங்கில் புற்று நோய் பற்றிய கண்காட்சியும விவரணத் திரைப்படமும காண்பிக்கப்பட்டன. (இ)

# திருமலையில் பட்டதாரி ஆசிரியர் ஒன்றியம் நிறுவ ஏற்பாடு

திருகோணமலை, ஏப்- 1

திருகோணமலை மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர் ஒன்றியமொன்றை நிறுவுவதற்கு பட்டதாரி ஆசிரியர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

பட்டதாரி ஆசிரியர்களின் சமபள உயர்வு பதவி உயர்வு சேவை மூப்பு, கௌரவம போன்ற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும முகமாக ஓர் ஒன்றியம அமைக்கப்பட வேண்டும.

இந்த நோக்கில் இவ்வொன்றியத்தை அமைக்கவிருக்கிறோம என ஆசிரியர் திரு காளிராசா தெரிவித்தார்.

இது முதலில் கோட்டக் கல்வி மட்டத்தில் தொடங்கி பின் மாவட்ட மட்டத்தில் அமைக்கப்படும என்று இவர் கருத்துத் தெரிவித்தார்.

(இ-287)

# பொது சொத்து மோசடி ஐவர் மீது வழக்கு தாக்கல்

கொழுமபு, ஏப் 2

அரசாங்க மரக் கூட்டுத்தாபன தலைவரை ஏமாற்றி 2லட்சத்து 51 ஆயிரம ரூபா பெறுமதியான மரக்கட்டைகளை மோசடி செய்து விற்றனர். இவ்வாறு ஐவருக்கெதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கு கொழுமபு மேல் நீதிமன்றத்தில் சட்ட மா அதிபர் மூலம தொடரப்பட்டிருக்கிறது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் சாரதி, அரச பெருந்தோட்டக்...

இவர்களுக்கு குற்றப் பத்திரங்களை ஒப்படைப்பதற்காக ஏப்ரல் மாதம 6ஆம திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பி விடவும்.

கொழுமபு மேல் நீதிமன்ற நீதிவான் ஏ எல் எம் பெர்னாண்டோ இவ்வாறு உத்தரவிட்டார்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபன தலைவர் திரு ஹர்ஷா குணரத்னவுக்கு போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பௌத்த விகாரை ஒன்றுக்கு இவற்றைப் பெற்றுக் கொடுப்பதாக ஏமாற்றி விட்டே, பிரதிவாதிகள் இந்த மோசடியைச் செய்துள்ளனர்.

இதனால் பொதுச் சொத்துக்...

# சிவில் நிர்வாகம் சீராவதற்கு போக்குவரத்துச் சேவை இன்றியமையாதது

## புலிகளின் திருமலை பொறுப்பாளர்

தமபலகாமம, ஏப்- 1

சிவில் நிர்வாகம சீராக நடைபெறுவதற்கு போக்குவரத்து சேவை இன்றியமையாததாகும.

ஆகவே போக்குவரத்துச் சேவையைச் சீர்செய்வதற்கு அதிகாரிகள் ஊழியர்கள் அனைவரும ஒன்றுசேர்ந்து செயற்பட வேண்டும.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ரூபன் கூறினார்.

அவர் போக்குவரத்துச் சேவை அதிகாரிகள் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றியபோது இவ்வாறு கூறினார்.

மாகாண ஆளுநர் லெப்...

...தாவது:-

போக்குவரத்துச் சேவை மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகும. இந்தச் சேவை சீராக இயங்கினால்தான் சிவில் நிர்வாகமும சீராக இயங்கும.

ஊழியர்கள் கடமையுணர்ச்சியுடனும புரிந்துணர்வுடனும சேவை செய்ய வேண்டும. இப்பொழுது சேவையில் ஈடுபடுத்த முடியாமல் இருக்கும பஸ்களை உதிரிப்பாகங்கள் கிடைத்ததும எவ்வளவு சீக்கிரமாக சேவையில் ஈடுபடுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் சேவையில் ஈடுபடுத்த வேண்டும.

மேலதிக நேரத்தை வீணடிக்காமல் கடமையுணர்வுடன் செயற்படுதல் வேண்டும.

உண்மையாக உழைத்தால்...

...தவிர்க்கப்பட வேண்டும தேவையான உதிரிப்பாகங்களை பெற்றுத் தருவதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு திரு ரூபன் தெரிவித்தார்.

(இ-288)

# சற்காலிக நியமனப் பத்திரம் வழங்கல்

சித்தன்கேணி, ஏப்- 1

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 58 பேருக்கும சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 99 பேருக்கும தற்காலிக நியமனப் பத்திரங்கள் வழங்கும வைபவம ... அண்மையில் நடைபெற்றன.

மருதனாமடம கோட்டக் கல்வி அலுவலர் திரு ஆர் கே குலசேகரம தலைமையில் இவ் வைபவம நடைபெற்றது.

இவ் வைபவத்திற் கலந்து கொண்ட பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலர் திரு இ சிவானந்தன் தற்காலிக நியமனக் கடிதங்களை பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

(இ-283)

# பயிற்சி ஆசிரியர் நியமனக்கடிதம்

மட்டக்களப்பு, ஏப் 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயிற்சி ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர் திரு இ சற்குணராசா வழங்கினார்.

மட்டக்களப்பு சிசிலியா மகளிர் கல்லூரியில் வைபவ ரீதியாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் 300 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. 129 பேருக்கான நியமனங்கள் 19-3-90 வழங்கப்பட்டன.

(ஐ—வ)

# மக்களும் பதவியும்

## மரண விசாரணை அதிகாரி

கொழுமபு, ஏப் 2

தெல்தோட்டை நகரில் வசிக்கும ஜனாப் அபுசாலி அடால் ஹஸன் கண்டி மாவட்டத்தின் கலகெதர தெல்தெனிய ... கன் தஹறய (தெற்கு) திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும. கண்டி நீதி பரிபாலன பிரிவின் சமாதான நீதிவானாகவும நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், கண்டி மாவட்ட நீதிவான் திரு நிஸ்ஸங்க உதலாகம முன்னிலையில் திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும, சமாதான நீதிவானாகவும சத்தியப் பிரமாணம செய்து கொண்டார்.

தெல்தோட்டை பள்ளிவாசலின் முன்னாள் டிரஸ்டியான ஜனாப் அபல் ஹஸன். ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தராவார்.

(இ-வ)

## பதில் செயலாளர்

திருகோணமலை, ஏப் 1

வடக்கு - கிழக்கு மாகாண உள்துறை அமைச்சின் பதில் செயலாளராக திரு எஸ் பற்குணம ஆளுநரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் முதலமைச்சரின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-288)

## 62 பேருக்கு ஆசிரிய நியமனம்

கொழுமபு, ஏப் 2

வெலிகாமம புதிய தெருவில் அமைந்துள்ள முர்ஸியா அரபுக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண கூட்டம அண்மையில் மத்ரஸா அதிபர் மௌலவி சுல்தான் எம முஹியத்தீன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் இச்சங்கத்தின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- மௌலவி எம எம நாஜிஹ்,

உப தலைவர்- மௌலவி எம எஸ் எம மர்ஷித்,

செயலாளர் மௌலவி ஏ ஆர் எம முனவ்வர்,

உப செயலாளர்- மௌலவி ஜே அப்துல் ஹை.

# ஜனாதிபதியின் நடவடிக்கைகளால் நாடு பாதுகாக்கப்பட்டது

## வித்தியாலய அதிபர் பெருமிதம்

நாத்தாண்டி, ஏப் 1

எமது ஜனாதிபதி திரு பிரேமதாசவின் மகிழ்ச்சிகரமான நடவ...

அமைச்சின் செயலாளர், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் சாரதி, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன ஊழியர் விகாரை அதிபர், வர்த்தகர் ஆகிய ஐவருக்கெதிராகவே இந்த வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

பிரதிவாதிகள் இந்த மோசடியைச் செய்துள்ளனர்.

இதனால் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தாமை தொடர்பான சட்டத்தின் கீழ் பிரதிவாதிகளுக்கெதிராக இந்த வழக்கு தொடரப்பட்டது.

(இ-வ)

யில் உரையாற்றியபோது இவ்வாறு கூறினார்-

மாகாண ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனவிரத்ன சகிதம் திருமலை பஸ் டிப்போவிற்கு விஜயம் செய்த திரு ரூபன் அங்கு நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்தார்-

திரு ரூபன் தொடர்ந்து கூறிய

காமல் கடமையுணர்வுடன் செயல்படுதல் வேண்டும்-

உண்மையாக உழைத்தால் தான் நமது சமுதாயம் நல்ல நிலைக்கு வரும்-

பாடசாலைச் சேவைகள் தாமதமின்றி நடைபெற வேண்டும்-

பஸ்களைக் கண்ட கண்ட இடத்தில் நிறுத்தி வைப்பது

நாத்தாண்டி, ஏப் 1

பயங்கரவாதிகளின் திட்டம் வெற்றி பெற்றிருந்தால் நாடு அவர்களின் ஆட்சியின் கீழ் அகப்பட்டிருக்கும் அதனால் நாடு அழிவுற்றிருக்கும்- மக்களில் பல்லாயிரக்கணக்கானோர் மடிந்திருப்பர்-

எமது ஜனாதிபதி திரு பிரேமதாசவின் மதிநுட்பமான நடவடிக்கைகளாலேயே நாடும் மக்களும் பாதுகாக்கப்பட்டனர்-

சங்கட்டிகுளம் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஜனாப் மீ.... இவ்வாறு உரையாற்றினார்.

எம முனவ்வர்,

உப செயலாளர்- மௌலவி ஜே அப்துல் ஹை,

பொருளாளர்- மௌலவி எஸ் எல் எம ஷாபி,

நிர்வாகக் குழு உறுப்பினர்கள்—

மௌலவி எம ஏ அப்துல் அஸீஸ்,

மௌலவி ஜே சபூர்தீன்,

மௌலவி எம ஏ எம பாஸி,

மௌலவி வை டி ஸவால்தீன்

மௌலவி எம ஜே எம அன்வர்,

மௌலவி ஏ ஆர் எம நூறுல்லாஹ்.

(இ)

# சட்ட திட்டம் சகலருக்கும்

## பொதுவாக அமைய வேண்டும்

### கண்டி மாநகர சபையின் எதிர்க்கட்சி தலைவர்

கண்டி, ஏப் 1

"கண்டி மாநகரில் சாராயத் தவறணைகள் மற்றும் மதுபான விற்பனை நிலையங்கள் முதலானவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களை அவற்றின் உரிமையாளர்கள் சிலர் சரியாகப் பேணுவதில்லை இந்தச் சட்ட திட்டம் சகலருக்கும் பொதுவாக அமைய வேண்டும்"

கண்டி மாநகர சபையின் எதிர்க் கட்சித் தலைவர் திரு ராபர்ட் குணவர்தன இவ்வாறு கூறினார்

மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் மேயர் திருமதி சந்திரா ரணராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது-

அங்கு உறுப்பினர்களின் முறைப்பாடு என்ற நிகழ்வின் போது திரு குணவர்தன மேலும் கூறியதாவது:-

"கண்டி நகரில் கடைகள் திறக்கும் நேரம் மாற்றம் செய்யப்பட்டதால் சாதாரண மக்கள் பெரும் சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்-

சாதாரண ஏழை மக்கள் காலையில் கடைக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை அனுபவிக்கின்றனர்-

பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்-

எனவே. ஏற்கனவே கடைப் பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்" என்றார்-

ஜனாப் இலாஹி அப்தீன் பேசுகையில் கண்டி மாநகர சபையில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை முதலில் நிரந்தரமாக்க வேண்டும்-

புதிய ஊழியர்களை நியமிக்க முன்பதாக இவர்களது பிரச்சினைகள் ஆராயப்படுதல் அவசியம்-

மஹியாவை மக்களுக்கு புதிய ஒரு வீட்டுத் திட்டத்தை உருவாக்கி அங்கு வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மாநகர சபை திட்டம் தயாரிக்க வேண்டும்"

மேயர் திருமதி சந்திரா ரணராஜா பேசுகையில் கூறியதாவது

புதிய சாப்புச் சட்ட விதிகள் தொடர்பாக மத்திய சந்தையில் இறைச்சி. மீன் முதலானவை பழுதாகிவிடக் கூடிய நிலைக்கு உட்படுத்தப்படுகின்றன மொத்த விற்பனையில் ஈடுபடுவோரும் இதன் காரணமாகப் பாதிக்கப்படுகிறார்கள்-

இந்த விதிகள் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க தோற்றுவிக்கப்பட்ட போதிலும் இதன் விளைவாக பொது மக்கள் அவதிப்படுகிறார்கள்" என்பதை நான் உணர்கிறேன்-

கண்டி ரயில் நிலையத்தை நோக்கி காணப்படும் பெட்டிக் கடைகள் பல நகரை அலங்கோலமாக்கின்றன-

அந்தப் பக்கமாக புதிய வர்த்தக வலயம் ஆரம்பிக்க வேண்டும்" இதுபற்றி இப்பொழுது மாநகர சபை ஆராய்ந்து வருகின்றது என்றார்-

(இ-017)

# வடக்கு கிழக்கில் பல்வேறு திட்டங்கள்

### வை. எம். எம். ஏ மேற்கொள்ளும்

கொழும்பு, ஏப் 2

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போஷாக்கு, சுய தொழில், ஆரம்பப் பாடசாலை போன்ற பல திட்டங்களை அகில இலங்கை வை எம எம ஏ பேரவை மேற்கொள்ளும்.

இதனை வை எம எம ஏ பேரவையின் புதிய தேசியத் தலைவர் ஜனாப் எம எப் சத்தார் முஹீட் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் நிருபர்கள் மாநாடொன்று நடைபெற்றது. இதில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

வை எம எம ஏயின் முன்னாள் தலைவர்களான அல்ஹாஜ் எம ஸுபைர் ஹஸன், அல்ஹாஜ் எஸ் எம கமால்தீன், அல்ஹாஜ் எம லாபீர் காசிம், அல்ஹாஜ் எம பத்ரி ஹாஷிம ஆகியோரும் இந்த நிருபர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நாட்டில் நிலவிய சுமுகமற்ற நிலைமை காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது பணிகளைக் கிரமமாக மேற்கொள்ள முடியவில்லை-

இனிமேல் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம்களின் நலனுக்கு நாம உழைப்போம என்றார்.

அல்ஹாஜ் எஸ் எம கமாலுத்தீன் பேசுகையில்—

சில குடும்பங்களில் ஒருவர் பெறும ஊதியம மூலமே பல உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் பராமரிக்கப்படுகின்றன.

இதனைக் கருத்திற் கொண்டு இத்தகைய முஸ்லிமகளின் நலனுக்கு உதவ நாம விசேட கவனம செலுத்தி உள்ளோம என்றார்.

முன்னாள் தலைவர் ஹாஜி ஸுபைர் ஹஸன் பேசுகையில்—

போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்க ஹுனுப்பிட்டியில் புனர் வாழ்வு நிலையம ஒன்று அமைக்கப்படும.

அதற்கென 15 ஏக்கர் காணியை வழங்கி உள்ளது என்றார்.

(இ-007)

சங்கட்டிகுளம் முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் பெற்றோர் ஆசிரியர், மாணவர்கள், பொலீஸ் பகுதியினர் இணைந்து நடத்திய பொதுக் கூட்டத்தில் அதிபர் உரையாற்றினார்-

கிராமத்தவர்களுக்கும் பொலீஸாருக்கும இடையில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காகவும கிராமத்தவர்களை வன் செயல்களிலிருந்து காப்பாற்றுவதற்கான வழி முறைகளைக் கையாள்வதற்காகவும இக் கூட்டம ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது

ஆனமடுவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு ஐ இன்ரான் இப் பொது வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்-

அவர் கூறியதாவது—

கல்விக் கூடங்கள், வணக்கஸ் தலங்கள். பொலீஸார் ஆகிய முப்பகுதியினரும இணைந்து கிராமத்திலே அமைதியை உருவாக்க முயல வேண்டும-

மனிதனின் உயிர் விலை மதிப்பற்றது- பொலீஸார் உயிரையும பொருட்படுத்தாது மக்களைப் பாதுகாத்தனர்-

பொலீஸாரும மனிதர்களே. அவர்களிடமும மனிதப் பண்புகளுண்டு- எனவே பொதுமக்கள் விசேடமாகக் கிராமப்புற மக்கள் அவர்களைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை-

இவ்வாறு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உரையாற்றினார்-

[ஐ—225]

## மாணவர் ஒன்றிய நிர்வாகிகள்

அக்கரைப்பற்று, ஏப் 1

கல்முனை ஸாஹிறாக் கல்லூரி உயர்தர விஞ்ஞானப் பிரிவின் மாணவர் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம அண்மையில் கல்லூரி கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது-

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்-

போஷகர்— ஜனாப் ஏ எம ஹுஸைன்- [அதிபர்]

பொறுப்பாசிரியர்கள்— ஜனாப்கள் ஏ எல் பதுர்தீன் ஏ எம பளீல்-

தலைவர்— செல்வன் .. எம எம ஷைசார்- உப தலைவர்— செல்வன் ஏ எம ஏ சிராஜ்-

செயலாளர்— செல்வன் எம எச் நௌஷாட்- உப செயலாளர்— செல்வன் எஸ் எம அரிப்

பொருளாளர்— செல்வன் என் நஹீம

பத்திரிகைக் குழு ஆசிரியர்— செல்வன் எம ஐ எம ஜாபிர்-

[ஐ—035]

# சிறுவர்களுக்கான விளையாட்டு போட்டி

## புத்தாண்டை முன்னிட்டு நடத்த பதுளையில் ஏற்பாடு

பதுளை ஏப் 1

சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியொன்றை எதிர்வரும் 11 ஆம் திகதி பதுளையில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-

சிங்கள—தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி போட்டிகளில் தேசிய போட்டிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது-

பதுளைசிறிகுரு விளையாட்டுக் கழகத்தினரால் இப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன-

சிறுவர்களுக்கான நடைப் போட்டி தேங்காய் துருவுதல், அழகுராணி மற்றும பல போட்டிகள் நடைபெறவுள்ளன அன்று மாலை வலைபந்தாட்ட போட்டியொன்றும பதுளை விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது-

[த-037]

## மலையக ஆசிரியர் எதிலும் குறைந்தவர்கள் அல்லர்

### கொத்தணி அதிபர் வி. விழாவில்பேச்சு

இராகலை ஏப் 1

"மலையக ஆசிரியர்கள் எதிலும் தாங்கள் குறைந்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர்-

இராகலை தமிழ் மகா வித்தியாலய கொத்தணி அதிபர் திரு எஸ் கிருஷ்ணன் லிடஸ்டேல் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்-

மேற்படி வித்தியாலய அதிபர் திரு இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது

இத் தோட்ட மண்ணில் பிறந்து வளர்ந்த அதே பாடசாலையில் ஆரமப கல்வியைக் கற்றவன் நான்-

அப்போது சூரியகாந்தித் தோட்டம எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இன்றும இருக்கின்றது- மலையகத்தவர் மிக மோசமான நிலையில் இருக்கின்றனர்-

இங்குள்ள மக்கள் எதற்கும ஒத்துழைப்பு கொடுப்பதாகத் தெரியவில்லை- ஏதோ இளைஞர்கள் மாத்திரம துடிப்புடன் இருப்பதைக் காண முடிகிறது-

இப்போது போதிய தகைமைகள் இல்லாதோருக்கு ஆசிரியர் பதவி கொடுத்த வருவதாக பலர் குறை கூறுவதாக அறிகின்றேன் அத கவறு அவர்களால் ஆரமப கல்வியாவது ஒழுங்காக அமையும-

இப்படி திரு கிருஷ்ணன் கூறினார்-

[த-265]

வெற்றி, தோல்வியின்றி முடிந்த

## வருடாந்த கிரிக்கெட் போட்டி

மாத்தறை, ஏப்- 1

மாத்தறை சென் தோமஸ் கல்லூரிக்கும, சென் சேர் வேஸஸ் கல்லூரிக்கும இடையே நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டி இம்முறையும வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது-

மாத்தறை உயன்வத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த கிரிக்கெட் ஆட்டத்தின் போது முதலில் துடுப்பெடுத்தாடிய சென் தோமஸ் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை எடுத்தனர்-

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென் சர்வேஸஸ் கல்லூரி அணி 9 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்களை எடுத்தது-

சென் தோமஸ் கல்லூரி அணி இரண்டாம இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களை எடுத்தது-

சென் சேர்வேஸஸ் கல்லூரி அணி 7 விக்கெட் இழப்புக்கு 64 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது-

இதனையடுத்து வருடாந்த கிரிக்கெட் ஆட்டம வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

[த-430]

## மெய்வல்லுநர் போட்டிகள்

பதுளை, ஏப்- 1

அலிஎல உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் நவதரு கோஷ்டி 124 புள்ளிகளைப் பெற்றுச் சாமபியனானது-

கடந்த ஞாயிறன்று மேற்படி போட்டிகள் ஆலி-எல விளையாட்டு மைதானத்தில் இடம பெற்றது- விளையாட்டு அமைச்சு இப் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது-

ஆலி-எல மத்திய மகா வித்தியாலய கோஷ்டி இரண்டாமிடத்தையும, சரசவி, நவண கோஷ்டிகள் மூன்றாமிடத்தையும பெற்றுக் கொண்டன- ஆலி-எல உதவி அரசாங்க அதிபர் திரு கே சந்திரசேன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்-

[த-037]




## நல்லுறவை வளர்க்க விளையாட்டு போட்டி

மடவளை, ஏப்- 1

பன்விலை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொலீஸ் பொது மக்கள் நல்லுறவை வளர்க்கும முகமாக ஏப்ரல் 9ஆம திகதி ஒரு விளையாட்டுப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது-

பன்விலை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் பாடசாலைகள் என்பன இதில் பங்குகொள்கின்றன-

பன்விலை பிரதேச செயலாளர் பன்விலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொத்தணி அதிபர்கள் என்போர் இணைந்து இவ் விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்துள்ளனர்- [த-431]

## போட்டி

மாத்தறை ஏப் 1

மாத்தறை நில்வளா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

(எ-430)

## கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி

கொழும்பு, ஏப் 2

கண்டி திரித்துவக் கல்லூரிக்கும, கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரிக்குமிடையில் வரையறுக்கப்பட்ட கிரிக்கெட் போட்டி ஒன்று 15-3-90 அன்று கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றது

இப் போட்டியில் கட்டுகஸ்தோட்டை அந்தோனியார் கல்லூரி 10 விக்கெட்டுகளால் திரித்துவக் கல்லூரியைத் தோற்கடித்தது-

இது அந்தோனியார் கல்லூரி 7ஆவது முறையாக பெற்ற வெற்றியாகும-

அந்தோனியார் கல்லூரி தாப்பில் விளையாடிய முத்தையா முரளீதரன் வெகு திறமையாக பந்து வீசினார்-

[த-455]

## கண்காட்சி கரபந்தாட்டம்

புத்தளம, ஏப்- 1

மூன்றாவது ஜனாதிபதி நடமாடும வேலைத் திட்டத்தை முன்னிட்டு புத்தளம சென்ட் அன்ட்றூஸ் கல்லூரித் திடலில் கண்காட்சி கரபந்தாட்டப் போட்டியொன்று நடைபெற்றது-

இப் போட்டியில் மாதம்பை "நிவ்சிக்ஸ்" கழகமும நாத்தாண்டி "யுனைட்டட்" கழகமும மோதிக் கொண்டன-

ஜனாதிபதி செயலக தேவைகளுக்காக வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் இந்தக் கண்காட்சிப் போட்டியை கண்டு களித்தனர்-

ஈற்றில் நாத்தாண்டி "யுனைட்டட்" கழகம 3—0 என்ற ஆட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது-

போட்டிகளில் கலந்து கொண்டு இரு கோஷ்டிகளுக்கும கரபந்தாட்டப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன

[த-241]




3—4—1990

காலை

அதிகாலை 2-45 முதல் 5-00 மணி வரை ஸஹர் விசேட நிகழ்ச்சி

5-00 நாதாஞ்சலி

5-05 தோத்திரமாலை - ஸ்ரீதேவி கருமாரியம்மன் சுப்ரபாதம

5-30 பாமாலை அம்மானைப் பிள்ளைத் தமிழ்

5-45 சைவநற்சிந்தனை

5-50 இஸ்லாமிய நற்சிந்தனை மௌலவி எம் எஸ் எம தாஹுல் முனீர்

5-55 பக்திப் பாடல்

6-00 [illegible]

8-30 பொலீஸாரும நாமும

8-45 மெல்லிசைப் பாடல்கள்

9-00 செய்திகள்

9-10 அறிவிப்புகள்

9-20 பக்திப் பாடல்கள்

9-30 உரைச்சித்திரம தலைவலியோ தலைவலி

10-00 நாதஸ்வர கச்சேரி ஏ எம சந்திரசேகரம

10-45 பஜன் - எம எஸ் சுப்புலக்ஷ்மி

11-00 ஒலிபரப்பு முடிவு

4—4—1990

அதிகாலை 2-45 முதல் 5 மணி வரை ஸஹர் விசேட நிகழ்ச்சி

காலை —

5-00 நாதாஞ்சலி

5-05 தோத்திரமாலை - விஷ்ணு சகஸ்ரநாமம்

5-30 பாமாலை - திருமங்கை யாழ்வார் அருட்பா

8-00 களத்துமேடு - சஞ்சிகை நிகழ்ச்சி

8-15 கதம்பம - நகைச்சுவைக் குறுநாவல் குறுநாடகங்கள்

8-45 மெல்லிசைப் பாடல்கள்

9-00 செய்திகள்

9-10 அறிவிப்புகள்

9-20 பக்திப் பாடல்கள்


9-30 கலைப்பூங்கா

10-45 பஜன்

11-00 ஒளிபரப்பு முடிவு




3—4—1990





ஏப்ரல் 3 (செவ்வாய்க்கிழமை)

ஏப்ரல் 4 (புதன்கிழமை)

வந்து சேரும நேரம

## இல்ல போட்டிகள்

# விமான சேவைகள்



## ஏப்ரல் 3 (செவ்வாய்க்கிழமை)

### வந்து சேரும் நேரம

| | | | |
|---|---|---|---|
| 0030 | சென்னை | யூ எல் | 122 |
| 0640 | மஸ்கட் | யூ எல் | 210 |
| 0700 | அபுதாபி | ஜீ எப் | 4144 |
| 0800 | டுபாய் | ஈ கே | 800 |
| 1020 | திருச்சி | யூ எல் | 132 |
| 1140 | சென்னை, பம்பாய் | ஐ சி | 573 |
| 1210 | சோபியா, அபுதாபி பாங்கொக் | எல்இசட் | 595 |
| 1330 | லண்டன் | இசட் பி | 630 |
| 1405 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1555 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 1755 | பம்பாய், சென்னை | ஐ சி | 586 |
| 2050 | கராச்சி, மாலைதிவு | பி கே | 774 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2230 | பாங்கொக், அபுதாபி, சோபியா | எல்இசட் | 596 |
| 2315 | சென்னை | யூ எல் | 122 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ எல் | 503 |
| 0730 | திருச்சி | யூ எல் | 131 |
| 0815 | அபுதாபி | ஜீ எப் | 4144 |
| 0915 | டுபாய் | ஈ கே | 800 |
| 1115 | திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 1200 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 1235 | சென்னை, பம்பாய் | ஐ சி | 573 |
| 1315 | சோபியா, அபுதாபி, பாங்கொக் | எல் இசட் | 595 |
| 1430 | லண்டன் | இசட் பி | 630 |
| 1730 | றியாத் | யூ எல் | 271 |
| 1840 | பம்பாய், சென்னை | ஐ சி | 586 |
| 1945 | சென்னை | ஐ சி | 121 |
| 2200 | கராச்சி, மாலைதிவு | பி கே | 775 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2330 | பாங்கொக், அபுதாபி, சோபியா | எல்இசட் | 596 |

## ஏப்ரல் 4 (புதன்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0540 | றியாத் | யூ எல் | 272 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன் டுபாய் | யூ எல் | 504 |
| 0710 | சிப்பல் தஹ்ரேன் கராச்சி | கே எல் | 801 |
| 0745 | ஜித்தா தஹ்ரேன் றியாத் | எஸ் வீ | 346 |
| 0845 | டுபாய் மாலைதிவு | ஈ கே | 802 |
| 1120 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1345 | மாலைதிவு டுபாய் | ஈ கே | 803 |
| 1925 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 2005 | சிங்கப்பூர் | யூ எல் | 303 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0100 | அபுதாபி பிராங்போர்ட் சிப்பல் | யூ எல் | 567 |
| 0125 | டுபாய் சூரிச் பாரிஸ் | யூ எல் | 523 |
| 0756 | குவைத் | கே யூ | 361 |
| 0830 | திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 0915 | ஜித்தா தஹ்ரேன் றியாத் | எஸ் வீ | 346 |
| 0937 | சிங்கப்பூர் | யூ எல் | 302 |
| 0930 | டுபாய் மாாலைதிவு | ஈ கே | 802 |
| 1215 | மாலைதீவு | யூ எல் | 121 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1450 | மாலைதீவு டுபாய் | ஈ கே | 803 |
| 1530 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 1545 | சென்னை | யூ எல் | 121 |
| 1755 | டுபாய் கராச்சி | யூ எல் | 181 |
| 1905 | கராச்சி தஹ்ரேன் சிப்பல் | கே எல் | 802 |
| 2055 | குவைத் | யூ எல் | 227 |
| 2155 | புக்கெட்கா நொரிடா | யூ எல் | 656 |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் ய — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் ரி ஜி — தாய் எயர் வேய்ஸ், இசட் பி — பாலி எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத் தியேக சேவை, கே எல் —கேஎல்எம் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 452218 (விமான நிலையம்)

---

இப் போட்டியில் கல்கிஸ்ஸ தோட்டை அந்தோனியார் கல்லூரி 10 விக்கெட்டுகளால் திரித்துவக் கல்லூரியைத் தோற்கடித்தது-

இது அந்தோனியார் கல்லூரி 7அவது முறையாக பெற்ற வெற்றியாகும-

அந்தோனியார் கல்லூரி தாப்பில் விளையாடிய முத்தையா

## இல்ல போட்டிகள்

மடவளை. ஏப் 1

கல்ஹிரிய தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் ரோஜா" இல்லம முதலிடத்தைப் பெற்றது-

[த-431]

சேனகுடா, ஏப் 1

தி வெள்ளைமணல் அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் முதலாவது இடத்தை உபைத் இல்லமும, இரண்டாவது இடத்தை வாலீத் இல்லமும, மூன்றாவது இடத்தை தாரீக் இல்லமும பெற்றன-

[த-054]

## நூல் நிலையம் அமைக்க உறுதி

கண்டி, ஏப்- 1

அக்குறணை கசாவத்தை முஸ்லிம வித்தியாலய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக நூல் நிலையம ஒன்றை அமைத்துக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்ட உறுப்பினரான ஜனாப் எஸ் ஏ எம உமர்கத்தா இதனை நிர்மாணித்துக் கொடுக்க முன்வந்துள்ளார்-

கசாவத்தை முஸ்லிம வித்தியாலயத்தின் இல்ல மாணவர்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்ற பொழுது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிய பொழுதே அவர் அந்த உறுதியை வழங்கினார்

[த-017]

---

காலை

அதிகாலை 2-45 முதல் 5-00 மணி வரை ஸஹர் விசேட நிகழ்ச்சி

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை - ஸ்ரீதேவி கருமாரியம்மன் சுப்ரபாதம
5-30 பாமாலை அம்மானைப் பிள்ளைத் தமிழ்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை மௌலவி எம் எஸ் எம தாஹல் முனீர்
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்திக்காள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 நாகவிநோதம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ் நெஞ்சோடு நெஞ்சம சுலைஹா எம ஜெப்பால்
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 பாட்டு சத்தியராணி அனந்த பிரசாத்
11-00 வீணைக் கச்சேரி எஸ் பாலச்சந்தர்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேடமுஸ்லிம நிகழ்ச்சி
6-30 சைவ நெறி
6-45 கத்தோலிக்க கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி
7-00 நாடகம "திசை மாறிய பறவைகள்" எழுதியவர் எம் அஸ்லம்கான்
7-25 இஸ்லாமிய கீதம பாடியவர்: எம் எச் எம ஷம்சுர்
7-35 கவிதைக் குறி வினாவிடை போட்டி நடத்துபவர்: பொலனறுவை எஸ் எம் அரிப்
7-40 இஷாத் தொழுகைக்கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்

இரவு —

8-00 இலக்கிய மன்றம நடத்துபவர்; தமபி ஐயா தேவதாஸ்

10-00 சாஸ்திரிய கச்சேரி ஏ எம சந்திரசேகரம
10-45 பஜன் - எம எஸ் சுப்புலக்ஷ்மி
11-00 ஒலிபரப்பு முடிவு

### 4—4—1990

அதிகாலை 2-45 முதல் 5 மணி வரை ஸஹர் விசேட நிகழ்ச்சி

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை - விஷ்ணு சகஸ்ரநாமம்
5-30 பாமாலை - திருமங்கையாழ்வார் அருட்பாசுரம
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
5-55 போதி மாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வீணை - ஈ ணி சங்கர சாஸ்திரி
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 கிளாரினட் - ஏ கே சி நடராஜன்
10-45 சிறுவர் பாடல்கள்
11-00 புல்லாங்குழல் - ரமணி
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேட முஸ்லிம நிகழ்ச்சி
6-30 அருளமுதம
6-45 மகாவலி நிகழ்ச்சி
7-00 இஸ்லாமிய கீதம பாடுபவர்: ஏ எச் எம முஹிதீன்
7-15 சமூகச் சித்திரம "ஊடுருவல்"
7-25 தஜ்வீத் வகுப்பு /தஜ்வீத் குறி வினாவிடைப் போட்டி
7-40 இஷாத் தொழுகைக்கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்

இரவு —

9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலைப்பூங்கா
10-45 பஜன்
11-00 ஒளிபரப்பு முடிவு

---

# டெலிவிஷன்

### 3—4—1990

## ரூபவாஹினி

விடுமுறை ஒலிபரப்பு —

9-00 "கிறும மிறும"
9-15 சித்துஜய
9-40 லமா பிரசங்க
10-05 நிர்வாகம
10-20 டேட்லைன்
10-45 உதார
11-10 நாடகம - சோக்சோக்கிஸ் — 2
11-35 ஒளிபரப்பு முடிவு

ரூபவா...னி

4-30 சொக்குர் ஸ்கூல்
5-00 செய்திகள் - சிங்களம
5-15 சிறுவர் களஞ்சியம - தமிழ்
5-30 "டி பென்டர்ஸ் ஆப்தி ஹேர்த்
6-00 முப்மணிகளுக்கு அஞ்சலி
6-10 "ஜெர்மன் வகுப்பு"
6-30 செய்திகள் - தமிழ்
6-55 "கலை அரங்கம
7-25 "அஹட்ட குணட்ட"
8-00 செய்திகள் - சிங்களம
8-30 "ஒ ஷில்"
9-05 சமபத் ரேக்கா
9-30 செய்திகள் - ஆங்கிலம
10-00 "டினஸ்டி"
10-50 ஒளிபரப்பு முடிவு

## ஐ. டி. என்.

6-00 முப்மணிகளுக்கு அஞ்சலி
6-15 யு எஸ் எஸ் ஆர் படம
6-30 செய்திகள் - சிங்களம
7-00 கி சலம
7-30 "பான் கிளப்"
8-00 நியூ ஒட் குப்பிள்
8-30 இன் சேர்ச் ஆப்த உ பார்ஸ்ட்
9-00 நிகாடோ விசிபன்
9-30 ரொக்போட் பைல்ஸ்
10-00 செய்திகள் - ஆங்கிலம
10-26 "ரொக்போட் பைல் - தொடர்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

நாட்டின் தற்போதைய

# சமாதானசூழ்நிலை எமது பெருவெற்றி

## — ஜனாதிபதி

கொழும்பு, ஏப் 2

இன்று நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலை எமக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்- இந்தியப் படையைத் திருப்பி அனுப்பியது நாம் பெற்ற மற்றைய வெற்றியாகும்-

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாறு கூறினார்-

ஸ்ரீ சுச்சரித்த மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மத்திய கொழும்பு கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்-

வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு பீ சிறிசேன குரே தலைமை வகித்தார்-

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து கூறியதாவது—

அந்தந்த இன மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டே நாம் நாட்டு மக்களைப் பாதுகாக்கிறோமே அன்றி ஆயுதத்தால் அல்ல-

விடுதலைப் புலிகளுடன் நாம் தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்-

இலங்கையைத் தாயகமாகக் கொண்ட சகல இன மக்களின் விசுவாசத்தையும் உறுதி செய்து கொண்டு நாம் பணியாற்றுவோம்

தமது பொறுப்புக்களைத் துரிதமாக நிறைவேற்றி நாட்டை அபிவிருத்தி செய்யவே திட்ட அமைச்சர்கள் முறை ஏற்படுத்தப்பட்டது-

விடயங்களைப் புரிந்து செயற்படுத்த வேண்டிய சிபார்சுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க திட்ட அமைச்சர்கள் அமைச்சர்களுக்கு உதவ வேண்டும்-

அமைச்சரவை உறுப்பினர்கள் இந்தச் சிபார்சுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு திட்ட அமைச்சர்களுக்கும், ராஜாங்க அமைச்சர்களுக்கும் ஒப்படைக்கப்படும்-

இத்திட்டத்தின் மூலம் வீண் விரயமும், மோசடியும் தவிர்க்கப்படும்-

பராமரிப்புப் பணிகளை ராஜாங்க அமைச்சர்கள் திறமையாகப் புரிய வேண்டும்-

இவ்வாறு ஜனாதிபதி கூறினார்-

சுற்றாடல் திட்ட அமைச்சரும் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் ராஜாங்க அமைச்சருமான குலாநிதி விமல் விக்கிரமசிங்காவும் உரையாற்றினர்-

(ந-007)

அமைச்சர் பதவி பறிபோனதால்

# வெளிநாட்டுக்கு சென்று ஓய்வு பெற மாட்டேன்

## பின்வரிசை எம். பியாக இருந்து மக்களுக்கு சேவை புரிவேன் — காமினி

அமைச்சர் பதவி பறிபோனதால் வெளிநாட்டுக்குப் போய் ஓய்வுபெற நான் விரும்பவில்லை பின்வரிசை எம பியாக இருந்து கொண்டு மக்களுக்கு இயலுமான சேவைகளை நான் புரிவேன்-

முன்னாள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு காமினி திசாநாயக்கா இவ்வாறு கூறினார்-

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது—

பதவி பறிபோனாலும் பதவியிலிருந்து விலகினாலும் பலதரப்பட்ட கதைகள் பேசப்படுவது வழக்கமாகும்- அவற்றை நிறுத்த முடியாது-

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலோ வேறு கட்சிகளிலோ சேர நான் தயாராக இல்லை-

கடின உழைப்பை விட்டு நல்ல ஓய்வு மட்டுமே கிடைத்துள்ளது-

பதவியில் இருந்து விலகிய பின் மனதுக்கு நிறைவாக உள்ளது-

எனது ஓய்வை எனது தொகுதி மக்களின் சேமநலனுக்குப் பயன்படுத்துவேன்-

இப்படி அவர் கூறினார்-

முன்னாள் மறுவாழ்வு, மறுசீரமைப்பு ராஜாங்க அமைச்சர் திரு கே வின்சன்ட் பெரேரா-

வேறு எந்தக் கட்சியிலும் சேர்ந்து பணியாற்ற நான் நினைக்கவில்லை-

பின்வரிசையில் ஐக்கிய தேசியக் கட்சி எம் பியாக இருந்து மக்களுக்குத் தொடர்ந்தும் சேவை புரிவேன் என்றார்-

முன்னாள் அரச பெருந்தோட்ட ராஜாங்க அமைச்சர் திரு சமரவீர வீரவன்னி-

பதவி பறிபோனாலும் நான் தைரியத்தை இழக்க மாட்டேன் மக்களுக்குத் தொடர்ந்தும் சேவை புரிவேன் என்றார்-

(ந-007)

## கனேடிய நிதி உதவி

வவுனியா மார்ச் 24

பருத்தித்துறை நகர புனரமைப்புக்காக கனேடிய அரசு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஊடாக 4½ கோடி ரூபாவை வழங்கியுள்ளது-

இதனை இவ்வருட இறுதிக்குள் செலவு செய்யாவிடின் அப்பணம் அரசுக்கு போய்ச் சேர்ந்து விடும்-

நகர சபை செயலாளர் திரு சண்முகநாதன் இவ்வாறு தெரிவித்தார்-

(இ-101)

# பாடசாலை: முன்னேற பெற்றோர் ஒத்துழைப்பு தேவை

## முஸ்லிம் வித்தியாலய அதிபர்

நீர்கொழும்பு, ஏப் 1

பாடசாலைக்கு எவ்வளவுதான் திறமையான ஆசிரியர்கள் கிடைத்தாலும் பெற்றோரின் ஒரு பாடசாலைக்கு எவ்வளவு ஒத்துழைப்பு இல்லையென்றால் அப் பாடசாலையை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வது முடியாத காரியமாகும்-

இவ்வாறு கூறினார் கமமல்துறை அல்-பலாஹ் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஜனாப் எம ஐ ஹாஜா அமீர்-

பிரஸ்தாப பாடசாலையில் மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார் செய்த ஆசிரியர்களை கௌரவித்து பரிசுகள் வழங்குவது தொடர்பான பாராட்டுக் கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது-

பெரும் எண்ணிக்கையான பெற்றோர்கள் கலந்து கொண்ட இவ் விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அதிபர் அமீர் மேற்கண்டவாறு கூறினார்-

காமல்துறைப் பள்ளிவாசல் கதீப் மௌலவி மதினா, பள்ளிவாசல் முன்னாள் தலைவர் ஜனாப் யூ எம அப்துர் ரஹ்மான் ஜனாப் எம எச் எம் [illegible] ஆசிரியர் ஜனாப் எம [illegible] ஆசிரியர் ஜனாப் [illegible] பவ

மாணவர்களைப் பாராட்டுவதுதான் வழக்கம்- ஆனால் அதே மாணவர்களைத் தயார்படுத்தி அவர்களுக்காக சிரமப்பட்ட ஆசிரியர்களையும் நாம் கௌரவிப்பதும் பரிசுகள் வழங்குவதும் புதுமை நிகழ்ச்சியாகும்- நன்றி மறவாத செயலாகும்-

பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்திய ஜனாப் ஏ எச் எம மசூர், திருமதி எம ஈ சில்வா ஆகிய ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இலவசமாகவே வகுப்புக்களை நடத்தினர் எனவே உண்மையில் இவர்கள் கௌரவத்திற்கும் நன்றிக்கும் உரியவர்களே-

இப் பாடசாலையைப் பொறுத்தவரையில் பெற்றோரின் [illegible] மிகவும் குறைவாகவே இருக்கின்றது- பெற்றோர்கள் ஆசிரியர்களோடு ஒத்துழைக்கவில்லை என்றால் எமது பாடசாலையில் முன்னேற்றம் வெறும் பேச்சளவில்தான் இருக்கும்-

இவ்வாறு அவர் கூறினார்-

# சிவனொளிபாத மலையை புனித பிரதேசமாக

## பிரகடனப்படுத்த வலியுறுத்து

அட்டன், ஏப் 1

சிவனொளிபாதமலை அமைந்துள்ள இடத்தைப் புனிதப் பிரதேசமாக அரசு பிரகடனப் படுத்த வேண்டும்.

மத்திய சமாதான குழுக் கூட்டத்தில் இவ்வாறு பலரும் வலியுறுத்தினர்.

இச்சமாதான குழுக் கூட்டம் குடாஓயா சர்வோதய மலையகப் பகுதி சேவை நிலையத்தில் அண்மையில் நடந்தது.

சர்வோதய இயக்கத்தின் பிரமுகர் திரு குணபால சமரநாயக்க கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

அட்டன் உதவிப் பொலீஸ் அதிகாரி திரு ஆனந்த ஹெட்டியாராச்சி உட்பட மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோர்வூட், நோட்டன் பிரதேச பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும்,

ஜனவசம, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனயாக்கம ஆகியவற்றின் அதிகாரிகளும்,

தொழிற்சங்கங்கள் மற்றும் தொண்டர் அமைப்புகளின் பிரமுகர்களும இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இங்கு பேசிய பலரும் சிவனொளிபாதமலை அமைந்துள்ள இடத்தை அரசு புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும என வலியுறுத்தினர்.

இக்கோரிக்கையை சிவனொளிபாதமலை தலைமை மதகுரு மூலமாக அரசாங்கத்திற்கு விடுக்க ஆவன செய்வதாக அட்டன் உதவிப் பொலீஸ் அதிபர் திரு ஆனந்த ஹெட்டியாராச்சி கூறினார்.

(இ-096)



அமைச்சர் அஸ்வருக்கு பதி, கலீல் வாழ்த்து

# முடிச்சுமாறிகள்

தொல்லை அதிகரிப்பு



முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் கடந்த சனியன்று இரு மூத்த முஸ்லிம தலைவர்களின் இல்லங்களுக்குச் சென்ற அவர்களின் நல்லாசிகளை பெற்றுக் கொண்டார்—

முதலாவது படத்தில் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூதுவுடன் அல்ஹாஜ் அஸ்வர் உரையாடுவதை ...ம,

முஸ்லிம லீக் தலைவர் அல்ஹாஜ் டாக்டர் எம சீ எம கலீல் அல்ஹாஜ் அஸ்வருக்குக் கை... கொடுத்து வாழ்த்து தெரிவிப்பதை மற்றைய படத்திலும காணலாம— (ந-007)

# எதிர்க்கட்சிகளின்
## கூட்டு மாநாடு ஏப்ரல் 5 இல்

கொழும்பு, ஏப் 2

எதிர்க்கட்சிகளின் கூட்டு மாநாடு எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி, கமயூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி, தமிழ் காங்கிரஸ் தேசவிமுக்தி ஜனதா கட்சி ஆகிய கட்சிகள் இந்த மாநாட்டில் பஙகு பற்றும -

ஸ்ரீலஙகா சுதந்திரக் கட்சி தொழிற்சஙகச் சமமேளன பொதுச் செயலாளர் ஜனாப் எம் ஏ அலவி மௌலானா இவ்வாற தெரிவித்தார்—

ஸ்ரீலஙகா தந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உடன் திரு தே வீ சில்வா திரு வாசுதேவ நாணயக்கார, திரு குமார் பொன்னமபலம், திரு பேர்னார்ட் சொயிஸா திரு நிஹால் பெரேரா ஆகியோர் மாநாட்டில் பஙகுபற்றுவர்

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மனித உரிமைகள், மீறல் பயஙகரவாதம போன்ற காரணஙகளை அடிப்படையாக வைத்த எதிர்க் கட்சிகள் இந்த மாநாட்டை நடத்துவதாக ஜனாப் மௌலானா கூறினார்— (ந-007)

# கல்வி முஸ்லிம்களின் கையிலிருந்துதவறிய அழியாச் செல்வம்

## கல்வி அதிகாரி அஸீஸ் கூறுகிறார்

கட்டுகஸ்தோட்டை ஏப் 1

கல்வி எனும செல்வம முஸ்லிமகளின் கைகளிலிருந்த தவறிப் போய் விட்ட ஒரு அழியாச் செல்வமாகும—

கண்டி கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப் பாடசாலைகளின் பொறுப்புக் கல்வி அதிகாரி ஜனாப் ஜே ஏ அஸீஸ் இவ்வாற கூறினார்—

கண்டி சவுலதியா முஸ்லிம வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடந்தது—

இதில் பிரதம அதிதியாகக் கலந்த கொண்டு உரையாற்றும போது ஜனாப் அஸீஸ் தொடர்ந்து பேசியதாவது—

இன்றைய எமது முஸ்லிமகள் பணம திரட்டுவதிலேயே மிகவும அக்கறை கொண்டவர்களாக ...கின்றார்கள்—

இந்நிலை எதிர்காலத்தில் எமது சமூகத்தை பிற்போக்கு நிலைக்கு அல்லது எனைய சமூகஙகளின வளர்ச்சியிலிருந்து எமமை கீழ் நிலைக்குத் தள்ளி விடும—

ஆகவே எமது இஸ்லாமியர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை ஊட்ட வேண்டும—

இஸ்லாம மார்க்கமம கல்விக்கு முன்னுரிமையளிக்கு "சீனா தேசம சென்றாயினும சீரான கல்வியைத் தேடு" என்ற கூறியிருப்பதை நாம நினைவில் கொள்ள வேண்டும என்ற கூறினார்—

வித்தியாலயத்தின் அதிபர் ஜனாப் எம அஸீஸ் தலைமை தாங்கினார்— (இ—139)

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலங்கை. தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 3 எப்ரல் 1990

DINAPATHI ... Gunasena Mawatha, Colom...

P. O Box 1613

...னாப் யூ எம அப்துர் ரஹ்மான் ஜனாப் எம எச் எம ... அதிபர் ஜனாப் எம ... ஆசிரியர் ஜனாப் ... பவல் ... ஆகியோர் உரை நிகழ்த்தினர்— இக் கூட்டத்தில் அதிபர் தொடர்ந்து கூறியதாவது

பொதுவாக பலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் ... பேச்சளவில்தான் இருக்கும—

இவ்வாற அவர் கூறினார்—

பலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவ மாணவிகளுக்கும ... பரீட்சைக்குத் தயார் செய்த ஆசிரியர்களுக்கும பரிசுகள் வழஙகப்பட்டன— (ஐ—223)

# தேடுதலில் இருவர்
# சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப் 2

தீவிரவாதிகளின் ஆயுதஙகளைக் கண்டுபிடிப்பதற்காக கொழும்பில் பொலீஸார் இரு தீவிரவாத சந்தேக நபர்களின் உதவியுடன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது இடமபெற்ற சமபவத்தில் மேற்படி இரு சந்தேக நபர்களும சுட்டுக் கொல்லப் பட்டனர்—

இத் தேடுதல் வேட்டையின் போது துப்பாக்கி ஒன்றைக் கண்டெடுத்த மேற்படி சந்தேக நபர்களில் ஒருவர் பொலீஸாரை சுட முயன்றார்— பொலீஸார் விரைந்து செயல்பட்டு அந் நபரை சுட்டு வீழ்த்தினர்— இச் சமயத்தைப் பயன்படுத்தி கான்ஸ்டபிள் ஒருவரை மற்ற சந்தேக நபர் மடக்க முற்பட்ட போது பொலீஸார் அவரையும சுட்டுக் கொன்றனர்—

அரசு விடுத்துள்ள அறிக்கையில் இச் சமபவம விவரிக்கப்பட்டுள்ளது—

கேகாலையில் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கி ... கைக்குண்டும வைத்திருந்த முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்— இவர் பதவி நீக்கம செய்யப்பட்டவராவார்

கல்மனையில் ஆற கடைகள் இனந்தெரியாதோரினால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன—

காலியில் திருமதி சந்திரலதா என்பவரும ... ஹே வி பி சந்தேக நபரான அன்டன் ராணதுங்க என்பவரால் குத்திக் கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது— [ந-032]

## வாழ்க்கை செலவு
## சுட்டெண் 964·2

கொழும்பு, ஏப் 2

கடந்த மார்ச் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவு சுட்டெண் 964—2 ஆக இருந்தது என்ற புள்ளி விவரத் திணைக்களம அறிவித்துள்ளது— (உ-032)

# முடிச்சுமாறிகள்
## தொல்லை அதிகரிப்பு

தெல்தெனிய, ஏப் 1

கண்டியில் முடிச்சுமாறிகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன—

இதனால் பொது மக்கள் தமது பணம மற்றும உடைமைகளை இழந்து வருகின்றனர்—

குறிப்பாக மத்திய சந்தைக்கு முன் (மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில்) உள்ள பஸ்தரிப்பு நிலையம, யட்டிநுவர வீதி தலதா வீதி ஆகிய இடஙகளிலேயே கூடுதலாக முடிச்சுமாறிகளின் தொல்லைகள் இடமபெற்று வருகின்றன—

தனியார், இ போ ச பஸ்கள் பிரஸ்தாப பஸ் தரிப்பு நிலையஙகளுக்குள் நிறுத்தப்பட்டதும பிரயாணிகள் முண்டியடித்துக் கொண்டு ஏறுகையிலேயே முடிச்சுமாறிகள் தம கைவரிசைகளை காட்டி வருகின்றனர்— (ஐ-289)

தமிழ் நூல்களும்
இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும்
அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய
நூல்கள் தொடர்பான
உங்கள் தேவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன
அண்ட் கம். லிமிட்.
217 ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி 23981 -84